விலை ரூபா: 8.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | ஆனி 30 | வியாழக்கிழமை (14.07.2005) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 207



ராம்கோ

MADRAS CEMENTS LTD

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது

RAMCO CEMENT

சீமெந்து


## கிழக்கில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள

# போராளிகளை உடன் வெளியேறுமாறு புலிகளின் தலைமைப்பீடம் அவசர உத்தரவு

(நமது நிருபர்)

**கிழக்கில் இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதியில் அரசியல் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்துப்போராளிகளையும் உடனடியாக தமது நிர்வாகப்பகுதிகளுக்கு திரும்புமாறு விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் நேற்று உத்தரவிட்டுள்ளது.**

**இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் போராளிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாத நிலையிலேயே இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

2002ஆம் ஆண்டு யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டதில் இருந்து இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதிகளில், விடுதலைப்புலிகள் தமது அரசியல் பணிகளை மேற்கொண்டிருந்தனர்.

நிராயுதபாணிகளாக அரசியல் பணிகளை மேற்கொண்டு வந்த போரா (12ஆம் பக்கம் பார்க்க)

## புத்தளத்தில் தமிழ் இளைஞன் நேற்று சுட்டுக் கொலை

(கொழும்பு)

புத்தளம் மதுரகுழிப்பகுதியில் நேற்றுக்காலை தமிழ் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கொழும்பு கிரான்பாஸை சேர்ந்த கிருஷ்ணன் ரவிச்சந்திரன் (வயது 23) என்ற இளைஞரே கொலைசெய்யப்பட்டவராவார்.

வெள்ளைநிற வானில் வந்தவர்கள் இவரின்மீது துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு தப்பிச்சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. உயிரிழந்தவரின் சடலத்திற்கு அருகே தேசியஅடை (12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பகுதி அதி உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனம்

(கொழும்பு)

ஜனாதிபதி மாளிகையை அண்மித்த சுற்றுப்பகுதியை அதிஉயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதியினால் இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள விசேட வர்த்தமானியின் பிரகாரம் கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஒருவருடத்திற்கு இது நடைமுறையில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய நடைமுறையில் கடுமையான நடைமுறைகள் பின்பற்றப்படவுள்ளன. இதன்படி ஜனாதிபதி மாளிகையின் வடக்கே இந்து சமுத்திரம், மேற்கே சைத்தா வீதி, பொலிஸ் தலைமையகம், கிழக்கே லோட்டஸ்றோட் சந்தி, கிழக்குப் பக்கமாக லோட்டஸ் றோட் மற்றும் தெற்கே பழைய பாராளுமன்ற சுற்றுவட்டம் ஆகியவற்றுக்கு உட்பட்ட அரச மற்றும் தனியார் கட்டடங்கள் நிலங்கள் அசையும் அசையாச்சொத்துக்கள் இவ் உயர்பாதுகாப்பு வலய சட்டதிட்டங்களுக்குள் உள்ளடக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், பங்குப்பரிவர்த்தனை நிலையம், இரத்தினக்கல் மற்றும் தங்கநகை ஆபரண அதிகாரசபை முதலீட்டுஅதிகாரசபை, இலங்கை விமானப்படைத்தலைமையகம் உள்ளிட்ட பலமுக்கியமான மக்கள் (12ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகள்-முஸ்லிம்கள் மட்டக்களப்பில் நேற்று சந்திப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், முஸ்லிம்களுக்குமிடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதில் மட்டக்களப்பில், தமிழ், முஸ்லிம் மக்களிடையே உறவினைக் கட்டியெழுப்பும் கட்டமைப்பொன்றினை உருவாக்குவது என்று இணக்கம் காணப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் நேற்று முற்பகல் 11மணி தொடங்கிய இச்சந்திப்பு சுமார் 3மணிநேரம் இடம்பெற்றது. இதன் பின்னர் ஊடகவியலாளர் மத்தியில் கருத்துரைத்த இளந்திரையன் நேற்றைய சந்திப்பில் இணங்கிக் கொண்டமைக்கு அமைய மாவட்டத்தின் தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையில் நல்லுறவினைப் பேணுவதற்காக அமைக்கப்படவுள்ள கட்டமைபில் முஸ்லிம்கள்,தமிழீழ விடுதலைப்புலிகள் மற்றும் நிர்வாக உயர் அதிகாரிகள் ஆகியோர் அங்கம் வகித்ததாக தெரிவித்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பு ஊடான நிதியை

## திருமலையில் தொடரும் பதற்றம்

திருகோணமலையில் நேற்றும் ... லிம் நலன்புரி முகாமிற்கு காவ ... கைக் குண்டு வீசப்பட்டதில் இரா

## ஜப்பான் அரசும் வழங்க மறுப்பு

(கொழும்பு)

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்புக்கு ஊடாக நிதி அளிக்கமுடியாது என்று ஜப்பானும் அறிவித்துள்ளது.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் நேற்று முன்தினம் உரையாற்றிய இலங்கைக்கான ஜப்பானியத்தூதுவர் ஹிடேக்கி மட்சூவோ இதனைத்தெரிவித்துள்ளார்.

நாம் எமது நிதி செலவீட்டிற்கான முறைகளில் கண்டிப்புடனேயே இருக்கிறோம். ஆழிப்பேரலைக்கு முன்னதாகவே தென்னிலங்கை மற்றும் தமிழீழப்பகுதிகளில் (12ஆம் பக்கம் பார்க்க)

திருகோணமலையில் நேற்றும் பதற்றமான நிலைகாணப்பட்டது. அங்கு நேற்றைய தொடர்ச்சியாக இராணுவத்தின் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட தாக்குதலை அடுத்து பதற்றநிலை உருவானது.

நேற்று அதிகாலை 1மணியளவில் மூதூர்ஆலிம்சேனை மில்லிற்கு அண்மையில் உள்ள முஸ்லிம் நலன்புரி முகாமிற்கு காவலுக்கு நின்ற இராணுவத்தினர் மீது கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலில் இரு இராணுவத்தினர் படுகாயமடைந்தனர் அத்துடன் அம்முகாமில் தங்கியிருந்த 4வயதுச்சிறுமி ஒருவரும் காயமடைந்துள்ளனர்.இதேவேளை சீனகுடா சோதனைச்சாவடி ஒன்றின்மீது கைக் குண்டு வீசப்பட்டதில் இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார் இது இவ்வாறிருக்க நேற்றுக்காலை 10மணிக்கு திருகோணமலை கண்டிவீதியில் காந்திநகர் சந்தியில் இருந்த இராணுவச் சோதனைச்சாவடி ஒன்றின் மீதும்கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. இதில் இரு இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர். (ச)

## அரசிற்கு விரைவில் பதில் கடிதம் சு.ப.தமிழ்ச்செல்வன் அறிவிப்பு

(வவுனியா)

போராளிகளின் போக்குவரவுக்கான பாதுகாப்பு உத்தரவாதம் தொடர்பாக அரசு அனுப்பிய பதில் திருப்திகரமாக இல்லாத நிலையில் அதற்கான பதில் அரசுக்கு அனுப்பப்படும் என்று தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

தென்தமிழீழ மாவட்டங்களில் விடுதலைப்புலிகளின் போக்குவரத்திற்கான பாதுகாப்பு உத்தரவாதம்கூறி விடுதலைப்புலிகள் 14நாட்கள் காலக்கெடுவிதித்திருந்தனர் எனினும் அதற்கு அரசு கடந்த 11ஆம் திகதி கடிதம் ஒன்றினை அனுப்பியிருந்தது அதில் போராளிகளின் பாதுகாப்புக்குறித்து போதுமான தகவல் எதுவும் இருக்கவில்லை (12ஆம்பக்கம் பார்க்க)

## திருமலைச்சம்பவம் விசாரணை ஆரம்பம்

(திருகோணமலை)

திருகோணமலை செல்வநாயகபுரத்தில் விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுத்தலைவர் ஹக்குருட் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணை (12ஆம்பக்கம் பார்க்க)

## இராணுவத்தளபாட இறக்குமதிக்கு அரசாங்கம் தற்காலிக தடைவிதிப்பு

(கொழும்பு)

இராணுவத்தளபாடங்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தற்காலிக தடைவிதித்துள்ளது. எனினும் அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள தற்காலிக தடை குறித்து முப்படைத்தளபதிகளும் கருத்துக்கூற மறுத்துள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிகாரணமாக இராணுவத்தளபாடங்களின் இறக்குமதிகளுக்கு அரசாங்கம் தற்காலிகத்தடை ஒன்றை நடைமுறைப்படுத்த முடிபுசெய்துள்ளது.

எதிர்காலத்தில் இறக்குமதி செய்யப்படவேண்டிய இராணுவத்தளபாடங்கள் குறித்து நன்கு ஆராய்ந்த பின்னரே இந்தத்தடை உத்த (12ஆம்பக்கம் பார்க்க)


ExpoAir
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-234999
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# விடுதலைப் புலிகள் மீதான தாக்குதலுக்கு தேசிய எழுச்சிப் பேரவை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை செல்வநாயகபுரத்தில் படுகொலைகளை மேற்கொண்ட ஸ்ரீலங்கா படைகளின் தாக்குதல் கோழைத்தனமான அநாகரிகமான செயல் என்பதுடன் ஸ்ரீலங்கா அரச படைகளின் மிகக் கொடூரமான படை நடவடிக்கை என்பதை சர்வதேச சமூகத்திற்கு சுட்டிக்காட்டி வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவ்வாறு வடமராட்சிக்கோட்ட தேசிய எழுச்சிப்பேரவை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது தமிழினத்தின் ஏகப் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் ஓர் இனத்தின் விடுதலைக்காக உழைக்கும் உன்னத போராளிகள் என்பதை சர்வதேச சமூகம் உணர்ந்துள்ளதுடன், எமது போராட்டத்தின் உண்மைத்தன்மையையும், நியாயத் தன்மையையும் நன்கறிந்துள்ளனர்.

போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி மூன்றுவருடங்களை தாண்டிய வேளையிலும், போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இயல்பு வாழ்வை அடையாத சூழலிலும், படையினரும் அவர்களுடன் சேர்ந்த சமூகவிரோத கும்பல்களும் எமது போராளிகளையும், புத்திஜீவிகளையும், உலகுக்கு உண்மையாக நீதித்தன்மையுடைய கருத்துக்களை கூறிவந்த ஊடகவியலாளர்களையும், திட்டமிட்டு கொலை செய்துள்ளனர்.

இந்த நிலையிலும் எமது தேசியத் தலைமையும் மக்களும் பொறுமையுடன் இருந்து வந்துள்ளனர்.

இவ்வாறு ஸ்ரீலங்கா இராணுவம் வலிந்து எமது தமிழீழ விடுதலைப் புலிகளை போருக்கு இழுக்க முனைந்த வேளையில் எல்லாம் புலிகள் பொறுமையுடன் இருந்து வந்துள்ளமையை சர்வதேசம் உணர வேண்டும்.

தற்போது புத்த பெருமானின் சிலையை பேரினவாதிகள் தமிழர் தாயகத் தலைநகராம் திருகோணமலையில் இரவோடு இரவாக வைத்து இனவாதத்தைத் தூண்டி போரை வலிந்து தொடக்க முனைந்தும்கூட பொறுமையின் உயர் நிலையை தமிழினம் கடைப்பிடித்து வந்துள்ளது.

இந்த நிலையில் கடந்த 10 ஆம் திகதி செல்வநாயக புரத்தில் படையினர் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள அரச பண்ணை விடுதியில் தங்கியிருந்த திருமலை மாவட்ட புலிகளின் தளபதி டிக்கான், பயிற்சி ஆசிரியர் குமரன் மற்றும் இருவருமாக நால்வரைத் திட்டமிட்டு, அவர்கள் இருந்த இடத்துள் புகுந்து கொலை செய்துள்ள அரச படைகளின் துரோகத்தனத்தை ஸ்ரீலங்கா அரசே பொறுப்பேற்க வேண்டும்.

இந்நடவடிக்கையூடாக ஸ்ரீலங்கா அரசு உடனடியாக படையினரை திருமலையிலிருந்து அகற்றி முறையான ஏற்பாடுகள் எடுக்கத் தவறுமேயானால் தமிழினம் தனது சுதந்திரப் போரில் இறுதிக் கட்டத்திற்குத் தள்ளப்படுவது தவிர்க்க முடியாது என்பதை ஸ்ரீலங்கா அரசுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் தெரியப்படுத்துகிறோம் என்றுள்ளது. (க)

## தென்மராட்சியில் பழங்களின் விலை அதிகரிப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரிப் பொதுச் சந்தையில் மாம்பழம், பலாப்பழம் ஆகியவற்றின் விலைகள் என்றுமில்லாத வகையில் அதிகரித்துள்ளன.

கறுத்தக் கொழும்பான் மாம்பழம் ஒன்று இப்போது நாற்பது ரூபா வரையில் விற்கப்படுகின்றது.

அதேபோன்று பலாப்பழத்தின் விலையும் அளவுக்கு ஏற்ப அதிகரித்துள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் இவ் வருடம் மாம்பழம், பலாப்பழம் ஆகியவற்றின் உற்பத்திகள் மிகவும் குறைந்துள்ளமையே இத்தகைய விலை அதிகரிப்புக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. (க-16)

# சமூகத்தின் எதிர்காலத்தை அழிக்கும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு இ.தொ.கட்சி ஆதரவு வழங்காது

(கொழும்பு)

மலையகத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகள் சமூகத்தின் எதிர்காலத்தை அழிக்குமானால் அத்தகைய அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவு அளிக்காது என்று அதன் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

பதுளை கொப்டன் தோட்டத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், மேல்கொத்மலைத் திட்டத்தினால் சுமார் 600 பேருக்கு வீடுகள்கிடைக்குமெனவும், 5 ஆயிரம் பேருக்கு தொழில் வாய்ப்பு கிடைக்கும் எனவும் உறுதிமொழி வழங்கப்பட்டது. இருந்தபோதிலும் அது தமது சமூகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துமாயின் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்போவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மேல்கொத்மலை நீர்மின் உற்பத்தித்திட்டம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலை மீறி செயற்படுத்தப்படுமானால் அதற்கு எதிராக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கடும் நடவடிக்கை எடுக்குமென்று தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் முத்துசிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

முன்னர் அரசாங்கம் மலையகத்தின் 6 முக்கிய நீர்வீழ்ச்சிகளை மையப்படுத்தி நீர்மின் திட்டத்தை அமைக்கத் திட்டமிட்டதாகவும், அதனை 10 ஆண்டுகளாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எதிர்த்து வந்ததாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் நாட்டின் மின் உற்பத்தி வீழ்ச்சியைக் கருத்தில் கொண்டு அதன் தேவைகருதி சென்பிளே நீர்வீழ்ச்சியை மாத்திரம் பயன்படுத்தி இந்த நீர்மின் திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் அங்கீகாரம் அளித்ததாகவும் முத்துசிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளும் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் தற்போது ஏனைய பகுதிகளில் நில அளவீட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதால் தமது கட்சி அது குறித்து சந்தேகம் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இலங்கை ஜனாதிபதியுடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பேச்சுவார்த்தை நடாத்த எண்ணியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (க-9)

# பசுபிக் ஆசிய வள மையத்தின் இணைத் தலைவர் யாழ்.விஜயம்

## மீனவர்களுக்கான கடனுதவி குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

பசுபிக ஆசிய வள மையத்தின் இணைத் தலைவர் இனோனி நிக்கோ நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வருகைதந்தார்.

யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவத்தொழிலாளர்களுக்கு சுழற்சி முறை அடிப்படையில் நிதியுதவி வழங்கும் நோக்குடனேயே அவர் யாழ் வந்துள்ளார்.

இது தொடர்பான கூட்டம் நேற்றுமுன்தினம் காலை யாழ்.மாவட்ட செயலகத்தில் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டததிற்கு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், யாழ்.மாவட்ட கடற்தொழில் திணைக்கள உதவிப்பணிப்பாளர் தர்மலிங்கம், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

பசுபிக் ஆசிய வள மையத்தின் மூலம் யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீன்வர்களில் ஒருதொகுதியினருக்கு முதலில் கடனுதவி வழங்கப்படவுள்ளது.

கடன் உதவியைப் பெறும் மீனவர்கள் அப்பணத்தைக் குறுகிய காலத்திற்குள் மீண்டும் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டாலும் அதை நீண்டகாலத்திற்கு பின் கடற்தொழில் சங்கங்களிடம் வழங்கி பின் சங்கங்கள் மூலம் வோறொரு மீனவருக்கு இக் கடனுதவியை வழங்கும் சுழற்சி முறைக் கடன் தொடர்பாக ஆராயப்பட்டது.

மேலும் எதிர்காலத்தில் யாழ். மாவடடத்தில் கடற்தொழிலை நவீனமயப்படுத்தி சிறந்த தொழில் நுட்பங்களை பயன்படுத்தி கடற்தொழிலை மேற்கொள்வதற்கான ஆக்க பூர்வமான வேலைகளை தற்போதிருந்தே முன்னெடுப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (19)

## இராசி பலன்

**14.07.2005**
**(ஆனி 30, வியாழக்கிழமை)**
**அட்டமி பின்னிரவு 4.31 மணிவரை**
**அத்தம் முற்பகல் 8.02 மணிவரை**
**இராகுகாலம் 1.30 - 3.00 மணிவரை**
**சுபநேரம் 7.30 -9.00 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | தேக நலன், சத்துரு ஜெயம், காரிய அனுகூலம், தொழில் வருமானம். |
| இடபம் | பணக் குறைவு, முயற்சி தாமதம், மனக் கவலை, புத்திரர் பற்றிய சிந்தனை. |
| மிதுனம் | தனவிரயம், தன்நம்பிக்கைக் குறைவு, காரிய தாமதம், உறவினர் சந்திப்பு. |
| கடகம் | நற்கீர்த்தி, மனோதைரியம், தொழில் நன்மை, போசன சுகம். |
| சிங்கம் | மனோ சங்கடம், ரோக நிலை, காரிய தாமதம், பேசன சுகக் குறைவு. |
| கன்னி | வருமானம், சயன சுகம், மாதர் நட்பு, புதிய முயற்சி. |
| துலாம் | சோம்பல் நிலை, காரிய இடையூறு, சயன சுகக் குறைவு, தனவிரயம். |
| விருச்சிகம் | நண்பிகள் வருகை, தனதானிய சேர்க்கை, குடும்ப சுகம், போசன சுகம். |
| தனுசு | நன்கொடை, பெரியோரால் மதிக்கப்படுதல், எடுத்த காரியம் கைகூடும், அதிகாரம். |
| மகரம் | புத்திரரால் கவலை, பொருள் விரயம், கட்டுப்பாடு, புதிய திருப்பம். |
| கும்பம் | பொருள் விரயம், சரீர பீடை, அமைதிக் குறைவு, வாகன பயம். |
| மீனம் | தேகநலன் குடும்ப மகிழ்ச்சி, தொழில் விருத்தி, நல்ல வருமானம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

**- வளவன்**

### சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் சிறுவர்களுக்கான நவீன சிகிச்சை விடுதி அமைக்க ஜப்பான் நிதியுதவி

(தென்மராட்சி)

2000 ஆம் ஆண்டில் இடம்பெற்ற தென்மராட்சி யுத்தத்தின் போது சேதமாக்கப்பட்ட சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் சிறுவருக்கான நவீன சிகிச்சை விடுதி ஒன்று ஜப்பானிய நிறுவனமாகிய சர்வதேச அபிவிருத்தி அமைப்பின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இத்தகவலை அண்மையில் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்கு வருகை தந்திருந்த மேற்படி அமைப்பின் உயர்மட்ட அதிகாரியான கொய்மா தெரிவித்துள்ளார்.

பல இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த சிறுவர் சிகிச்சை விடுதியில், சிறுவர் பூங்கா, சிறுவர் நூலகம், சிறுவர்க்கான தொலைக்காட்சி மற்றும் சிறுவர்களைப் பராமரிக்கும் பெற்றோர் தங்குவதற்கான அறைகளும் அமையவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையின் தலைவரான க.கேதீஸ்வரனின் ஏற்பாட்டிலேயே இத்திட்டம் அமைக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது. (க-16)

### தபால்த் திணைக்களத்தில் நெருக்கடி

(கொழும்பு)

ஓய்வூதியம் வழங்குவதற்கான நிதி உரியநேரத்தில் கிடைக்காததால் தமது திணைக்களம் நெருக்கடியை எதிர்நோக்குவதாக தபால் மா அதிபர் சேனாதீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக திறைசேரிக்கும் மாவட்ட செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பாலான மாவட்டங்களில் உள்ள தபால் நிலையங்களுக்கு உரிய நேரத்தில் ஓய்வூதியம் வழங்குவதற்கான நிதி அனுப்பப்படாததால், ஓய்வூதியம் வழங்க திணைக்களத்துக்குச் சொந்தமான நிதியை செலவிட நேரிடுவதாக சுட்டிக்காட்டிய அவர்,

இந்த நிலையைத் தொடர்ந்தும் மேற்கொள்வதில் சிக்கல் தோன்றியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இதனால், ஓய்வூதியம் வழங்குவதற்குத் தேவையான நிதியைத் திறைசேரி நேரடியாகத் தபால் திணைக்களத்துக்கு வழங்குவது குறித்து கவனத்தில் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார். (க-2)

# இருவர் கைது

(சம்பூர்)

திருகோணமலை சம்பூரிலிருந்து படகில் சென்ற இருவரை பாதுகாப்பு வலயத்திற்குள் உட்புகுந்தார்கள் எனத் தெரிவித்து கடற்படையினர் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் அவர்களைக் கைது செய்துள்ளனர்.

சுமன் மற்றும் சி றீகரன் ஆகியோரே கடற்படையினரால் கைது செய்யப்பட்டு இரவு 8.30 மணிக்கு துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவதற்கு முன்னர் கடற்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(ற-4)

# மழைநீர் சேகரிக்கும் தாங்கி

(தென்மராட்சி)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் மழைநீர் சேகரிக்கும் தாங்கி ஒன்றினை ஸ்ரீலங்கா மழை நீர் சேகரிப்பு மையம் அமைத்துக் கொடுக்கவுள்ளது.

இவ் வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைப் பணிகளுக்கு உதவும் நோக்குடனேயே இத் தாங்கி அமைக்கப்படுகின்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையின் முயற்சியினாலேயே இத் தாங்கி அமைக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். (க-16)


# உடன் விற்பனைக்கு உண்டு

**பின்வரும் பொருட்கள் விற்பனைக்கு உண்டு**

- ஒவ்செற் பிளேற் (பாவித்தது)
- ஈய எழுத்துக்கள் மற்றும் ஈய லெற்றுகள் (புதியது)
- புத்தகம், கொப்பி என்பவற்றிற்கு கிளிப்பிடும் மெசின் (அச்சகங்களுக்குரியது. சிறிய திருத்தம் உண்டு)
- சிறிய ஜெனறேற்றர்
- ஈய எழுத்துக்கள் வைக்கப்படும் கேஸ் (பலகையினாலானது)
- கோழிக்கூடுகள் மற்றும் கதிரைகளுக்கான பாலைத்தடிகள்
- வெற்றுப் பைவர்கள் (6 லீற்றர்)

**மலிவான விலையில் வழங்கப்படும். பார்வையிடும் நேரம் தினசரி மாலை 4.00 மணிக்குப் பின்னர்.**

தொடர்பு:-
விற்பனை முகாமையாளர்
வலம்புரி
இல 3, 2ஆம் ஒழுங்கை பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(நிராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில்)

# CARITAS-HUDEC JAFFNA VACANCY

Position Vacant:

## 1.Senior Manager in Construction

**Base Station:** Mulaitivu

**Qualification & Experience:**

The post holder reports directly to the Program Manager (Expatriate)and the Assistant Director of Caritas-Hudec- jaffna. The post holder will undertaken the following activities.

01. Grade I Technical officer/ Ciyil Engineer with 15-20 years experience in the same field
02. Experience in project planning, Implementation,Monitoring and Evaluating.
03. Excellent skill in monitoring implementation of program activities.
04. Strong interpersonal and liaison skills.
05. Computer literacy in WinWord,Excel and email software.
06. Age between 40-50 years.
07. Good knowledge of written and spoken English and able to prepare Monthly Progress Report.
08. Good team player.
09. Represent Caritas-Hudec on the issue of shelter activities at district and divisional level coordination meetings with government,NGO 's, UN organizations and the private sector.
10. Regular visits to monitor progress of programme activities and regular reporting back to programme Manager.
11. Post based in Mulaitivu, with regular visits to Killinochchi and Jaffna.

## 2. Secretary

evaluating staff personals, The post holder will undertaken the following activities.

**Base Station:** Killinochchi

**Qualification & Experience:**

The post holder reports directly to the Project Coordinator (Expatriate) and the Assistant Director of Caritas-Hudec- jaffna.

01. Should have Secretariat /administrative bacaground.
02. Assist the management on all programmatic matters such as developing and maintaining a filing system, compilation of beneficiary data basis (livelihood, housing,micro-finance).
03. Translate documents into Tamil or English as required and provide printed copies & letter drafting.

and services useful for the programme.

05. Realize correspondence and reporting for the Senior Construction Manager and letter drafting or contracts for the finance manager with external organizations, governments, banks, supplier`s beneficiary groups, including the related e-mail.
06. Good command in English (oral & written)
07. Computer literacy in MS office and email software.
08. Ability to work independently.
09. Excellent analytical skills.
10. Good team player.

## 3.Senior Manager in Logistics

To work in full partnership with the Caritas Internationals Program Expatriate Advisor in managing, monitorng and evaluating logistic activities.

**Base Station:** Killinochchi

**Qualification & Experience:**

& in written (English).

The post holder will undertaken the following activities.

1. Have excellent knowedge in Logistic field and least 3 years experience in the same field.
2. Plan and manage all activities related to procurement transportation and Storage of materials & equipment as necessary for the program implementation out side the construction department.
3. Assist the Purchasing Office in preparine tenders, documents & receipt of quotations as necessary.

Administrator.

5. Assist at the beginning of the month with the Budget Controller to make a provision expenses regarding logistic activities.
6. Have to submit monthly running chart sheets (Pickups,Motor Bikes, Tractors, Trucks) & explanatory about assets materials in Word (including inventory).
7. Supervise all distribution of materials as per Program implementation out side construction department.
8. Post based in Killjnochchi, with regular visits to Mulaitivu and Jaffna.

## 4. Livelihood Manager

evaluating projects which assist individuals affected by the tsunami to restore their livelihoods.

**Base Station:** Killinochchi

**Qualification & Experience:**

The post holder Report directly to the overall Program Manager/ Coordinator. The post holder will undertaken the following activities.

ticipatory process which are inclusive of a diverse group of individuals, including, vulnerable group.

02. Ensure a high level of program quality in Livelihood Project design, implementation, monitoring and evaluating.
03. Identify capacity building needs to team' s project officers, projectmanagers and animators /social workers and local partners.
04. Organize training and workshops to build and improve capacities of the above mentioned staff.
05. Prepare accurate and timely reports to donors.
06. Share experiences, methodologies and lessons learned with CI Livelihood Partner in other Diocese of Sri Lanka.

ordination meetings aith government, NGO 's. Un organizations and the private sector.

08. Work with project officers to regularly monitor and evaluate Livelihood programs (fisheries,agriculture, small enterprises
09. Experience using word processors, spread sheets and email.
10. Fluency in Tamil and English
11. Good Communication Skills.
12. Demonstrated knowledge in agriculture, fisheries,micro enterprises sector

## 5.Translator

To work in full partnership with the Caritas Internationals (CI) Livelihood Program Expatriate Advisor and the other staffs.

**Base Station:** Killinochchi

**Qualification & Experience:**

The post holder Report directly to the overall Program Manager/ Coordinator. The post holder will undertaken the following activities.

1. Should have 2 years experience in interpreting/equivalent.
2. Good command in English (oral & written)
3. Good communication skills & ideally will also do some Teaching in English
4. Good team player.
5. Translate documents into Tamil or English as required.
6. Computer literacy Microsoft Word and Excel.
7. Post based in Killinochchi, with regular visits to Mulaitivu and Jaffna.

Caritas-Hudec recruits qualified individuals without distinction of ethnic background,religion or gender.

(C) 9737

Interested candidates are encouraged to apply by submitting
1.Their curriculum Vitae,
2.A letter of motivation, and
3.Two non related referees

Before 22 July 2005 at Caritas-Hudec,14 Mathew's Road Depgu Street, Jaffna. Please make sure to include a telephone contact with your submission

## இராணுவச் சிப்பாய் விடுதலை

(யாழ்ப்பாணம்)

1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இயக்கச்சி இராணுவ முகாமில் கடமையாற்றிய கோப்ரல் கலகமுவலாகே சரத் ஹேமச்சந்திர என்பரை,துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாக அதே இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ வீரர் நலகமலாகே ஹேமபால என்பவருக்கு எதிரான வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி. எஸ்.வரதராஜா முன்னிலையில் நடைபெற்றது. கொலை வழக்கு விசாரணை முடிவில் வழக்குத் தொடுநர் தரப்பு சாட்சிகளில் முரண்பாடுகள் காணப்படுவதாகத் தெரிவித்த நீதிபதி எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார். அரச தரப்பில் அரச சட்டவாதி செல்வி. சுகந்தி கந்தசாமியும், எதிரி தரப்பில் சட்டத்தரணி என். சிறிகாந்தாவும் ஆஜரானார்கள். (ச-19)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

பாடசாலையிலிருந்து இடைவிலகி கல்வி எதனையும் தொடராது இருககும் மாணவர்களுக்கான விசேட கணனிப் பயிற்சி வகுப்புக்கள் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தலைமை அலுவலகத்தில் இயஙகி வரும் கணனிக்கல்வி நிலையத்தில் அடுத்த மாதம் முறபகுதியில் ஆரம்பமாகவுள்ளது. எனவே இக கணனிப் பயிற்சியை கற்க விரும்பும் மாணவர்கள் இம் மாதம் 25ஆம் திகதிக்கு முன் இவ் அலுவலகத்தில் விண்ணபபப்படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ற)

## பாப்பரசரின் இறுதி நூல் வெளியீடு

திருத்தந்தை 16ஆம் பெனடிக்த் பாபபரசரின் இறுதி நூல் அண்மையில் வெளியிடப்பட்டது.

145 பக்கங்களைக் கொண்ட இந் நூல் பாப்பரசரின் 3 உரைகளின் தொகுப்பாக அமைந்திருககின்றது.

1992ஆம் ஆண்டு இத்தாலியில் கத்தோலிக்க கலாசாரத்திற்காக இவர் விருது பெற்றபோது ஆற்றிய உரை, 1997ஆம் ஆண்டு மனித உயிர் பற்றி ஆற்றிய உரை, 2005ஆம் ஆண்டு 2ஆம் ஜோவான் பவுலின் இறபபின் போது இவர் ஆற்றிய உரை என்பவற்றின் தொகுப்பாகவே இந் நூல் அமைந்துள்ளது. (க)

## சீரற்ற மின்விநியோகம்

கடந்த சில திணங்களாக யாழ்ப்பாணம் நல்லூர் வடக்கில் மின் விநியோகம் சீரற்று இருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

பகல் நேரங்களில் அடிக்கடி நின்று நின்று வரும் மின்சாரம் சில நாட்களில் இரவு நேரங்களில் 10.00 மணி தொடககம் மறுநாள் காலை 10 .00 மணிவரை இல்லாமல் இருப்பதாகவும், இதனால் அப்பகுதி மின்பாவனையாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய மின் தடையால் குளிர்சாதனப் பெட்டிகளில் வைக்கப்படும் உணவுப்பொருட்கள் பழுதடைந்து பாவனைக்கு உதவாததாகி விடுவதாகவும் இந்நிலையைச் சீராக்க மின்சார சபை உடன்கவனம் செலுத்த வேண்டுமென்றும் அப்பகுதி மக்கள் கேட்டுக கொள்கிறார்கள். (து)

## மாபெரும் நற்கருணை மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் மறை மாவட்டத்தில் கடந்த 9ஆம் திகதி ஆரம்பமான மாபெரும நற்கருணை மாநாடு தொடர்ந்து எதிர்வரும் 17ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

அதன்படி நாளை வெள்ளிக்கிழமை தாய்,தந்தையர் பெரியோருககான நற்கருணை ஒன்றுகூடல் அகவொளி நிலைய இயக்குநர் ஏற்பாட்டிலும், நாளை மறுதினம் குருக்கள், துறவிகள், அருட்சகோதரர்களுக்கான நற்கருணை ஒன்றுகூடல் திருவழிபாட்டு நிலைய இயக்குநர் ஏற்பாட்டிலும் நிகழ்த்தத்திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதி புனித மடுத்தீனார்குருமட மைதானத்தில் ஆயர் தலைமையில் சிறப்புப் பிரதிநிதிகளோடு யாழ்.மறைமாவட்டத்தைச் சேர்ந்த குருக்கள் ,துறவியா, இறை மக்கள் இணைந்த ஒன்றுகூடல இடம்பெறும். (க-2)

## இன்று ஒரு தகவல்

# அறியாமை சுகம்

இந்த உலகத்தில் உண்மையாகவே வேதாந்தம் பேசுபவர்களும் உண்டு. உள்ளுக்குள் வேறுமாதிரி இருந்து கொண்டு வெளியில் வேதாந்தம் பேசுபவர்களும் உண்டு. ஒரு ஆள் இருந்தான். அவர் ஒரு கடை வைத்து வியாபாரம் செய்து கொண்டிருந்தான். மகாகஞ்சன். யாருக்கும் எந்த உதவியும் செய்யமாட்டான். எச்சில் கை என்ன... ஈரக்கையை கூட உதற மாட்டான் அப்படிப்பட்ட மனிதன்.

அந்த ஊருக்கு ஒரு முனிவர்வருவார். வருடத்திற்கு ஒரு முறை வந்து இரண்டு மூன்று நாட்கள் இருப்பார். அதன் பின்பு போய்விடுவார். அந்த முனிவர் வரும் போதெல்லாம் இந்த ஆள் எழுந்து ஓடிப்போய் அவரைவரவேற்பான். மிகப்பெரிய வேதாந்தி மாதிரி அவரிடம் பேசிக்கொண்டிருப்பான். "காயமே இது பொய் வெறும் காற்றடைத்த பை" என்பான். "தர்மம் தலைகாக்கும்" என்பான். "பணம் என்னை சார் பணம் இன்று ஒருவனின் கையில் இருக்கும் நாளைக்கு வேறு ஒருவனின் கையில் இருக்கும் எல்லாம் மாயம்! எனக்குத்தான் இன்னும் இந்த சம்சார பந்தத்திலிருந்து விடுபடநேரம் வரவில்லை" என்பான்.

அந்த முனிவரும் இந்த் ஆள் இப்படிச் சொல்வதைக் கேட்டவுடன்" ஏன் அப்படிச் சொல்கிறாய்? இப்போது கூட நீ சரி என்று சொன்னால் உனக்குத் தீட்சை கொடுத்து இதி லிருந்து விடுபடும் ஞானத்தைப் போதிக்கிறேன் என்பார். உடனே அந்த ஆள என்ன சொல்வான்தெரியுமா?" ஐயோ சாமி இப்போது அது எப்படி முடியும்? பிள்ளைகள் சிறுவர்கள். அவர்களுக்குத் திருமணம் செய்து என் கடமையை முடித்து விட்டால் நீங்கள் சொல்லும்படி செய்துவிடலாம்" என்பான்.

சரி என்று முனிவர் போய்விடுவார். அடுத்த முறை வருவார். இவன் வழக்கம் போல் வேதாந்தம் பேசுவான். "சரி-தீட்சை கொடுக்கிறேன் வா" என்றால் "பேரன் பேத்தியைப் பார்க்க வேண்டும். கோர்ட்டில் கேஸ் நடக்கிறது. அது முடிய வேண்டும்" என்று தயங்க ஆரம்பித்துவிடுவான். எல்லாம் சொல்லுவான் ஆனால் குடிப்பதற்குத் தண்ணீர் கூட தர மாட்டான்.

பல வருடங்கள் கழித்து மீண்டும் ஒருநாள் முனிவர் ஊருக்கு வந்தார். இவனது கடைக்கும் வந்தார். அங்கே கல்லாவில் நமது ஆள் இல்லை. அவனது மகன்தான் உட்கார்ந்திருந்தான். அப்பாவைப் போலவே இவனும் எழுந்து ஓடி வந்து முனிவரை வரவேற்றான். "அப்பா எங்கே?" என்று கேட்டார் முனிவர். "ஐயோ அதை ஏன் கேட்கிறீர்கள் சாமி? உங்களிடம் தீட்சை வாங்கி இந்த சம்சார பந்தத்திலிருந்து விடுதலை பெறவேண்டும் என்று சொல்லிக் கொண்டேயிருப்பார். அது நிறைவேறாமலே போய்ச் சேர்ந்து விட்டார். போனமாதம் ஒரு நாள் திடீரென்று "நெஞ்சு வலிக்கிறது" என்றார். அவ்வளவு தான் பொட்டென்று போய்விட்டார் என்று புலம்பினான் மகன்.

இதைக் கேட்டதும் முனிவர் சிரித்தார் "அவன் எங்கே போவான்? உன் தந்தை எங்கேயும் போகவில்லை. இதோ வாலை ஆட்டிக்கொண்டு உன்காலடியிலேயே இருக்கிறான் பார்" என்று சொல்லி அங்கே நின்று கொண்டிருந்த ஒரு நாயைச் சுட்டிக்காட்டினார். "என்ன சாமி சொல்கிறீர்கள்?" என்று ஆச்சரியமாகக் கேட்டான் மகன். உடனே முனிவர் அந்த நாயின் தலையில் தட்டி "பேசு" என்றார். உடனே அந்த நாய் வேதாந்தம் பேச ஆரம்பித்துவிட்டது. "காயமே இது பொய் வெறும் காற்றடைத்த பை" என்றது.

முனிவர் சொன்னார் "அடே! இப்போது ஒன்றும் கெட்டுப் போகவில்லை! நீவிரும்பினால் சொல்லு... உனக்குத் தீட்சை கொடுத்து என் பின்னாலேயே அழைத்துக் கொண்டுபோய் உனக்கு ஞானத்தைப் போதிக்கிறேன்! விருகிறாயா? என்றார்.

உடனே அந்த நாய் "ஐயோ அதை ஏன் கேட்கிறீர்கள் சாமி! நான் உண்ணாமல் தின்னாமல் ஏராளமாக சொத்துச் சேர்த்து வைத்துவிட்டேன். என்பிள்ளைகள் அதன் பெருமை தெரியாமல் இரவில் கதவைத்திறந்து விட்டு தூங்கிவிடுவார்கள். அதனால் இப்படி நாயாகப் பிறந்து இரவு பகலாக சுற்றிச் சுற்றி வந்து காவல் காத்துக் கொண்டிருக்கிறேன். இப்போது எப்படி வரமுடியும்?" என்று கேட்டதாம்.

அறியாமையிலேயே சுகம் கண்டு இப்படி இருக்கும் ஆட்களுக்கு எப்படி விடுதலைகிடைக்கும்? எப்போது விடுதலை கிடைக்கும்? என்று கேட்கிறார் தசாவதானி திருக்குறள் பெ.இராமையா! அவர் கேட்பதும் நியாயம் தானே!

இந்தக் காலத்து சிறுவன் ஒருவன் தந்தையிடம் சொன்னான். "அப்பா... இன்று நான் ஒரு ரூபா மிச்சப்படுத்தினேன்" என்றான். "அப்படியா? என்ன செய்தாய்?" என்று கேட்டார் அப்பா. "டவுன் பஸ்ஸில் ஏறாமல் அதன் பின்னாலேயே ஓடிவந்தேன் ஒரு ரூபா மிச்சம் என்றான் பையன். "அடப்பாவி! ஒரு ஆட்டோவின் பின்னால் ஓடிவந்திருந்தால் 10 ரூபா மிச்சமாகியிருக்குமே? வீணாக்கி விட்டாயே" என்றாராம் தந்தை.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# பொதுக்கட்டமைப்பு வேலைத்திட்டங்கள் ஊடாக தமிழீழம் உருவாகிவிடும் - விமல் வீரவன்ச

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு வேலைத் திட்டத்தினூடாக தமிழீழம் உருவாகிவிடும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

வட-கிழக்கு முழுமையாக புலிகளின் கட்டுப் பாட்டுக்குள் செல்லும் அபாயம் பொதுக்கட்டமைப் பினூடாக ஏற்பட்டுள்ளது என்றும் விமல் வீரவன்ச கூறினார்.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் மாநாடொன்று அண்மையில் அநுராதபுரத்தில் நடைபெற்றது. இங்கு உரையாற்றும் போதே விமல் வீரவன்ச மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி நாட்டைப் பற்றி சிந்திக்காமல் புலி களுடன் கைகோர்த்துள்ளார். அத்துடன், ஜே.வி.பி. அரசியலிலிருந்து விலகினால் அரசாங்கத்தை கவிழ்க்கமாட்டோம் என்ற ஐக்கிய தேசியக் கட்சி யின் உறுதி மொழியைப் பெற்றுக் கொண்டே ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பை உருவாக்கினார்.

அன்று நாம் போர் நிறுத்த உடன்படிக்கையையும் முழுமையாய் நிராகரித்தோம். புலிகள் ஈழத்தை அமைத்துக் கொள்வ தற்கான ஆவணமாக போர் நிறுத்த உடன் படிக் கையை நாம் நோக்கினோம்.



சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அன்று எம்முடன் இணைந்து போர் நிறுத்த உடன்படிக்கையை எதிர்த்தனர். அந்தவகையில் தான் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற கூட்டமைப்பு உருவாக்கப் பட்டது. ஆனால், ஜனாதிபதி வரலாற்றை மறந்து செயற்படுகின்றார்.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக்காலம் இன்னும் சில மாதங்களில் முடிவடைந்துவிடும்.

இந்நிலையில், இன்னுமொரு பண்டாரநாயக்கவை நாட்டின் தலைவராக்க முயற்சிப்பதாகத் தெரிகிறது.

பொதுக் கட்டமைப்பினால் முஸ்லிம் மக்கள் புறக் கணிக்கப்பட்டுள்ளனர். சுனாமியால் பாதிக் கப்பட்டவர்களில் அதிகமானோர் முஸ்லிம்கள் என்பதனை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றார்.(ற-4)

# போராளிகள் மீதான தாக்குதல்களால் யுத்தநிறுத்தத்திற்கு பெரும் பாதிப்பு!

## சம்பந்தன் எம்.பி. அறிக்கை

(திருகோணமலை)

வடுதலைப்புலிகள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும தாக்குதல்களில் படையினரின் ஒரு பிரிவு வெளிப் படையான முறையில் சம்பந்தப்பட்டிருப்பது யுத்த நிறுத்த உடன்படிக்கையைக் கடைப்பிடிப் பது தொடர்பான அரசின் நேர்மைத் தன்மையைப் பாதித் துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரி வித்துள்ளது.

இவ்வாறான சம்பவங்களால் யுத்த நிறுத்தத் திற்குப் பெரும் பாதிப்புக்கள் ஏற்படும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் சார்பாக அதன் நாடாளு மன்ற உறுப்பினர் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது,

நிராயுதபாணிகளாக இருந்த இரு போராளிகளும், இரு பொது மக்களும் உப்புவெளி விவசாய பண்ணை வளாகத்திலுள்ள வீடொன்றில் வைத்து படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ள வீட்டிற்குச் செல்லும்பாதையும், வெளியேறிச் செல்லும் பாதை யும் படையினரின் சோதனையைத் தாண்டியே அமைந்துள்ளது.

இவ்வாறான பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ள திருமலை யில் அண்மைக் காலமாகப் பலப் படுத்தப்பட்டு வந்துள்ளது.

இத்தாக்குதல் இடம்பெற்ற இடம் அரச கட்டுப் பாட்டுப் பகுதியாகும். இத் தாக்குதல் நடாத்தப்பட்டதன் நோக்கம் யுத்த நிறுத்தத்தைச் சீர்குலைப்பதே ஆகும்.

இத்தகைய தாக்குதல்களில் படையினரின் ஒரு பகுதியினர் சம்பந தப்பட்டிருப்பது யுத்த நிறுத்தத்தை அரசாங்கம் கடைபபிடிப்பதன் உறுதிப்பாட்டில் உள்ள நேர்மையைப் பெரிய அளவில் பாதித்துள்ளது.

இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெறாது தடுப்ப தற்கான உறுதியான நடவடிக்கைக்களை உடனடியாக அரசு மேற்கொள்ள வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது என்றுள்ளது. (க)

# 400 பட்டதாரிகளுக்கு தொழிலமைச்சில் நியமனம்

## நாளை நியமனக் கடிதங்கள் அனுப்பிவைப்பு

(கொழும்பு)

நானூறு பட்டதாரிகளுக்கு தொழிலமைச்சில் நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கு நடவ டிக் கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மனித வளப் பிரிவு உதவியாளர்களுக்கும் செயற திறன் அபிவிருத்திப் பிரிவு உதவியாளர்களுக்கும் இதன் கீழ் நியமனம் வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நாளை வெள்ளிக்கிழமை வழங்கப்படவுள்ளது. இந்தப்பட்ட தாரிகள் அனைவரையும் மாவட்ட செயலக அலு வலகங்களிலும் பிரதேச செயலக அலுவலகங்களி லும் சேர்த்துக்கொள்ள ஆலோசிக்கப்பட்டுள்ளது.

நிறுவனங்களின் செயற்திறன்களை மேம்படுத்து தல், அல்லலுறும் குடும்பங்களின் நலன்களை மேம் படுத்துதல், தொழிற்சங்க செயற்பாடுகள், வறுமை ஒழிப்பு செயற்பாடுகள் போன்றன இந்தப்பட்டதாரி களிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

அத்துடன், குடும்பங்களுக்கு குறைந்த வட்டியில் வீடமைப்பு உதவிகள் வழங்குதல், அவர்க ளது பிள்ளைகளின் கல்வித்துறை யினை மேம்படுத்து தல் போன்ற வேலைத்திட்டங்களும் புதிதாக நிய மிக்கப்படும் பட்டதாரிகளிடம் ஒப்படைக்கப்பட விருப்பதாக தொழில் உறவுகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.(ற-4)

## முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு

# எரிபொருள் மானியம் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

பிரயாணிகள் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள சகல முச்சக்கர வண்டிச் சொந்தக்காரர்களுக்கும் எரிபொருள் மானியத்தை வழங்க அரசாங்கம் நட வடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய மானியக் கொடுப்பனவைப் பெறு வதற்குத் தகுதி பெற்ற சகல முச்சரக்கர வண்டிச் சொந்தக்காரர்களும் மக்கள் வங்கிக் கிளை ஒன்றில் கணக்கு ஒன்றை ஆரம்பிப்பது அவசியமாகும். மானி யக் கொடுப்பனவுகள் அனைத்தும் இந்தக் கணக் கில் சேர்த்துக் கொள்ளப்படும்.

இதேவேளை, பிரதி நிதியமைச்சர் ர்ஞ்சித் சியம் பலாப்பிட்டிய தகவல் தருகையில்,

மானியக் கொடுப்பனவுத் தொகை பற்றி வெகு விரைவில் தீர்மானிக்கப்படும் என்று கூறியுள்ளார்.(க-2)

# இந்து பிரச்சாரகர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்து சமய அலுவல்கள் அமைச்சு மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற் பயிற் சிக்கு உதவும் அமைச்சினால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள ஆன்மீன எழுச்சிப் பட்டறைகளில் கலந்து கொண்ட இளைஞர், யுவதிகளிலிருந்து பயிற்சி ஆசி ரியர்களால் தெரிவு செய்யப்பட்ட 55 இளைஞர், யுவதிகள் கடந்த ஜூன் மாதம் 11 ஆம் திகதி மேல திக பயிற்சிக்காக இந்தியாவின், பெங்களூரில் உள்ள வாழும் கலை நிறுவனத்தின் தலைமைய கத்திற்குச் சென்றிருந்தனர்.

அங்கு நடாத்தப்பட்ட ஒரு மாதகால பயிற்சிகளை முடித்துக் கொண்ட அவர்கள் நாடு திரும்பவுள்ளனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனை யின் பேரிலும் தீவிர முயற்சியின் பயனாகவும் இந்துக் களை இந்துக்களாக வாழவைக்கும் முயற்சியின் ஒரு முக்கிய நிகழ்வாக இப் பிரச்சாரகர்கள் பயிற்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், இலங்கை யில் இந்து சமய வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக வும் இந் நிகழ்வு அமைகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி இளைஞர், யுவதிகள் மேலதிகப் பயிற் சித் திட்டத்தை வெற்றிகரமாக முடித்தமைக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நாளை வெள்ளிக்கிழமை அமைச்சின் கேட்போர் கூடத்தில் பிற்பகல் 3.00 மணிகு அவர்களுக்கான சான்றிதழ் கள் வழங்கும் வைபவம் நடைபெறவுள்ளது. (ற)

# கைக்குழந்தையை விற்ற 5 பேர் கைது

கைக்குழந்தை ஒன்றை விற்பனை செய்ததாகக் கூறப்படும் 5பேரைத் தெல்தெனியப் பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களுள் 4 பெண் களும் அடங்குவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிறந்து 5 நாளான கைக்குழந்தையையே இவ் வாறு விற்றுள்ளதாக தெல்தெனியப் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர்கள் நுவரெலியப் பிரதேசத்தில் இருந்து வந்துள்ளதோடு கைக்குழந்தையைப் ரூபா 15 ஆயிரத்துக்கு விற்பதற்கு இணங்கியுள்ளனர் என் றும் அவர் தெரிவித்தார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்செய்த பின்னர் அவர் களில் 4 பேரைப் பிணையில் விடுதலை செய்ததாகவும்,

கைக்குழந்தையின் தாய் எனக் கூறப்படும் பெண் ணைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளதுடன் அப் பெண்ணை மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-2)

# தமிழகப் பயணம்

பயணக் கட்டுரை

34 பஸ்ஸுக்குள் கையடக்கத் தொலைபேசி களவாடப்பட்ட பின்னர் அது பிடிபட்டதனால் பஸ் சற்றுத் தாமதமாகவே நுங்கம் பாக்கத்தை அடைந்தது.

அகப்பட்ட கள்ளனைப் பொலிஸ் நிலையத்திற்கு இளைஞர்கள் சிலர் இழுதது்ச சென்றனர். இந்நிகழ்வுகள் என் உள்ளத்தை ஆக்கிரமித்திருக்க, நடததுநர் லொயலாக் கொலிச் என்று குரலதர, பஸ்ஸிலிருந்து இறங்கிச் சென்றேன்.

## மாமல்லபுரம் சென்றோம்

பகல் வேளையை உள்ளகப் பயிற்சி உட்கொண்டு வீடுவதால் இரவிலேயே மாநாடு கூடி அன்று நடந்த சம்பவங்களை ஆராய்வது வழக்கம். அவ்வாறு ஆராயும் மாநாடு பின்னிரவு ஒரு மணி கூட ஆகலாம். அந்தளவுக்கு, சென்னையில் அவதானித்ததை ஆராய்ச்சி செய்வோம். மறுநாள் ஞாயிற்றுக் கிழமை என்பதால் எங்கே செல்லலாம் என்ற கேள்வி எழுந்த போது, மாமல்லபுரத்திற்குச் செல்லலாமே என்றேன். எனது பிரேரணையை எல்லோரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டதுடன், மாநாட்டை நிறைவு செய்துவிட்டு நித்திராதேவியை வரவேற்கத் தயாரானோம். ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் மாமல்ல்வபுரம் செல்வதற்கான

வதில் எமக்கு அலாதிப் பிரியம்.

பஸ் மாமல்லவபுரத்தைச் சென்றடைந்ததும் எம்மை வரவேற்பதற்காகக் காத்திருந்தவர்கள் போல ஆட்டோ சாரதிகள் வாங்க சார்... நம்ம ஆட்டோவில் ஏறிக்கொள்ளுங்க... பௌவ்வியமாகக் கூறி எம்மைப் பின் தொடர்ந்தனர்.

ஆட்டோ சாரதியில் ஒருவர் விசிற்சிங் காட் ஒன்றை எம்மிடம் தந்தார்.

இதில் இருக்கின்ற இடமெல்லாம் கூட்டிச் சென்று காட்டலாம் என்றார்.

அவர் தந்த விசிட்டிங் காட்சில் மாமல்லவபுரத்தில் பார்க்கவேண்டிய இடங்கள் குறிக்கப்பட்டிருந்தன. ஏற்கனவே மாமல்லவபுரத்திற்கு வந்த அனுபவம் எங்கள் எவரிடமும் இல்லாததன் காரணமாக விசிட்டிங் காட் தந்தவரின் ஆட்டோவை வாடகைக்கு அமர்த்திக் கொண்டோம்.

மாமல்லவபுரம் சிற்ப ஓவியங்களுக்குப் பெயர் போன இடம். கருங்கல் சிலைகள் என்றாலே மாமல்லவபுரமே

இருந்த போதிலும் நிலைமையைச் சமாளிப்பதற்காக கற்தேரைப் பார்த்த



கருங்கல்லால் செதுக்கப்பட்ட யானை


பின்னர் வேண்டிக் கொள்வதாகக் கூறினோம்.

அப்போது அவர்கள் ஓர் உண்மை

யவை என்பதை அறிந்தபோது அளவு கடந்த ஆனந்தம் ஏற்பட்டது.

தமிழகத்து மக்கள் தமது ஆட்சி

# மாமல்லவபுரத்தில் நின்று நிலைக்கும் பல்லவர் காலச் சிற்பங்கள்



மாமல்லவபுரத்தில் கற்தேர் அமைந்த இடம்

யைக் கூறினார்கள். சார், கற்தேரைப் பார்ப்பதாயின் இந்தியாவைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே பத்து ரூபா. வெளிநாட்டவர்களாயின் நூற்று ஐம்பது ரூபா செலுத்த வேண்டும் என்றனர். இந்திய ரூபா 150 என்றால், அதன இலங்கைப் பெறுமதி 375 ரூபாவாக இருக்கும். 375 ரூபாவைக் கொடுத்துக் கற்தேரைப் பார்க்கவேண்டுமா?

இநதக் கேள்வி எங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் பிறிட்டாலும், அதனை எவரும் வெளியில் காட்டவிரும்ப வில்லை.

பத்து ரூபாவுடன் கற்தேரைப் பார்க்க


வரலாற்றைச் சான்றாதாரப்படுத்திக் கொண்டுள்ளமை தமிழர்களுக்குப் பெருமை தருவதாகவுள்ளது.

## நுங்கு விற்பனை

பத்து ரூபாவுடன் கற்தேரைப்-பார்த்துவிட்டு வெளியேறினோம். மேற்

என் . விஜயன்

படி நாம் கொடுத்த கட்டணம் மாமல்ல வபுரத்தின் ஏனைய இடங்களைப் பார்வையிடுவதற்குமானதென்பதை ஆட்டோ சாரதி மூலம் அறிந்து கொண்



கற்கோவில் மண்டபம்

ஏற்பாடுகளைச் செய்து கொண்டு கோயம்பேடு பஸ் நிலையத்திற்குச் சென்றோம். கோயம்பேடு பஸ் நிலையம் சென்னையில் மிகப் பிரமாண்டமான பஸ் நிலையம். தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட அந்த பஸ் நிலையத்திற்கு 103 கோடி ரூபா செலவாகியிருந்தது.

குடிநீர் வசதி, மலசலகூட வசதி, தேநீர்ச் சாலைகள் மற்றும் சிறு கடைகள், பயணிகள் தங்கவேண்டியிருப்பின் அதற்கான ஏற்பாடுகள். குளிப்பதற்கான ஒழுங்குகள் என சகல வசதிகளையும் கொண்டதாக கோயம்பேடு பஸ் நிலையம் காட்சி தந்தது.

சுருங்கக் கூறின் விமான நிலையத்திற்கு ஒப்பானதாக அந்த பஸ் நிலையம நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இது தமிழகத்தின் நுட்பமான கட்டட நிர்மாணத்திற்கு நல்லதோர் உதாரணமாகும்.

சென்னைப் புறநகர்ப் பகுதிகளுக்குச் செல்வதற்கான பஸ்தரிப்பில் இருந்து மாமல்லவபுரம் செல்லும் வண்டியில் ஏறிக்கொண்டோம். பயணத்தின் போதெல்லாம், தமிழகத்தின் இயற்கைக் காட்சிகளை இரசித்துக் கொள்

நினைவிற்கு வரும்.

ஈழத்தில் இருக்கின்ற அநேகமான ஆலயங்களுக்கு அங்கிருந்தே கருங்கல் சிலைகள் கொண்டுவரப்பட்டன.

அத்துணை சிறப்புமிக்க அந்தப் புண்ணிய மண்ணில் கால்பட்டதைப் பாக்கியமாக எண்ணிக்கொண்டோம்.

ஆட்டோ சாரதி முதலில் கருங்கல் தேர் உள்ள இடத்திற்குக் கூட்டிச் சென்றார். ஆட்டோவில் இருந்து இறங்கியதும் நடைபாதை வியாபாரிகள் நம் கரங்களைப் பற்றிக் கொண்டனர். கொஞ்சம் பொறுங்க சாமி, முதலில் தண்ணீர் குடிக்கவேண்டும் என்றோம்.

தண்ணீரா? அதோ இருக்கிறது சார் அங்கே வாங்க என்றபடியே எம்மை இழுத்துச் சென்றனர். என்ன செய்வது மணிவாசகன் திருவாசகத்தில் பாடியது போல அவர்கள் நம்மைச் சிக்கனப் பிடித்துக் கொண்டார்கள்.

எங்ஙனம் எழுந்தருளுவது? மீள்வதாயின் அவர்களிடம் ஏதாவது வேண்டிக்கொள்வதுதான் ஒரேவழி.

அவர்கள் வைத்திருந்த சிறிய சிற்பங்களை விலைகேட்டோம். ஒரு செற்றின் விலை 100 ரூபா என்றார்கள். அவர்களின் விலை ஜாஸ்தியாக

வேண்டுமென முடிவுசெய்தோம். தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களாக நம்மைக் காட்டிக் கொள்வதன் மூலம் பத்து ரூபா ரிக்கெற்றை எடுத்துக் கொள்ளலாம். அதற்கு நாம் எதுவும் பேசாமல் பணத்தைக் கொடுத்து ரிக்கெற்றைப் பெற்றுக் கொள்வதே ஒரேவழி.

நண்பர் திரு. உதயகுமார் 50 ரூபாவைக் கொடுத்து ரிக்கெற்றைப் பெற்றுக் கொள்ள 5 பேருமாக கற்தேரைப் பார்க்கச் சென்றோம்.

கருங்கல்லினாலான தேர் அதனோடு சேர்ந்து யானை, நந்தி, கற்கோவில். அற்புதமான அந்தச் சிற்ப வேலைகள் பல்லவர்காலத்திற்கு உரி

டோம். அதனால் பத்துரூபாவுக்கான பற்றுச் சீட்டைப் பக்குவமாக வைத்துக் கொண்டோம்.

வெளியில் மோர், இளநீர், கடலை வியாபாரங்கள் களைகட்டியிருந்தன. கூடவே நுங்கும் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் நுங்கு இருந்தாலும் அது ஒரு போதும் சந்தைக்கு வந்ததில்லை. ஒரு நுங்கின் விலை ஐந்து ரூபாவுக்கு விற்கப்பட்டது. யாழ்ப்பாணத்து மண்ணில் பிறந்த நாம் மாமல்லவபுரத்தில் நுங்கு வேண்டிக் குடிப்பதில் காட்டிய வேகத்தை நினைக்கும் போதெல்லாம் சிரிப்பு ஏற்படவே செய்யும். (வளரும்)

# தரம் – 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

**இல:16** **ஆக்கம்: சுந்தர் வெளியீடு**

**வினாத்தாள் - II** நேரம்: 1மணி 15 நிமிடங்கள்

❖ இவ்வினாத்தாளில் 13 வினாக்கள் உள்ளன.


❖ தரப்பட்டுள்ள அறிவுறுத்தலின்படி எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

**[01] சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

அது ஒரு அழகான பூந்தோட்டம், அங்கு பல வண்ண மலர்கள் பூத்திருக்கின்றன. அழகிய வண்டுகள் பூக்களில் அமர்ந்து தேனை உறிஞ்சிக் குடித்தன. மாதுரி மலர்த்தோட்டத்தின் அழகில் மனதைப் பறிகொடுத்து அமைதியாக இரசித்துக் கொண்டிருந்தாள்.

(i) "அழகிய" என்னும் சொல் (பெயர் அடைமொழி, வினை அடைமொழி)
(ii) "உறிஞ்சி" என்னும் சொல் (பெயர் அடைமொழி, வினை அடைமொழி)
(iii) இங்குள்ள உயர்திணை, பெண்பால்ச் சொல் ஒன்றை எழுதுக (..............................)
(iv) அஃறிணை பலவின்பால் சொல் ஒன்றை எழுதுக(..............................)
(v) "இரசித்துக் கொண்டிருந்தாள்" என்னும் சொல் எக்காலத்தில் அமைந்துள்ளது? (..............................)

**[02] இங்கு தரப்பட்டுள்ள படத்தை நன்கு அவதானித்து விடை எழுதுக.**




(i) இப்படத்தின் மூலம் வெளிக்காட்டப்படும் காட்சியை எங்கு அவதானிக்கலாம்? (..............................)
(ii) இங்குள்ள மனிதன் என்ன செய்கின்றான்? (..............................)
(iii) இங்குள்ள மாடுகள் என்ன செய்கின்றன? (..............................)
(iv) இந்த செயற்பாட்டின் மூலம் நிலத்தில் ஏற்படும் மாற்றம் எவ்வாறு அழைக்கப்படும்? (..............................)
(v) இத்தகைய செயற்பாட்டுக்கு பயன்படுத்தப்படும் உபகரணம் எவ்வாறு அழைக்கப்படும்? (..............................)
(vi) இத்தகைய செயற்பாட்டுக்கு தற்காலத்தில் பயன்படுத்தப்படும் உபகரணத்தின் பெயர் என்ன? (..............................)
(vii) மாடுகளின் மூக்கினூடாக ஓட்டப்பட்டுள்ள கயிறு எவ்வாறு அழைக்கப்படும்? இதன் பயன் என்ன? (..............................)
(viii) சூடு மிதிக்கும் இடத்தில் எருதுகளுக்கு வழங்கப்படும் பெயர் என்ன? (..............................)
(ix) இம்மனிதன் தலையில் கட்டியுள்ள துணி எவ்வாறு அழைக்கப்படும்? (..............................)
(x) மாடுகளின் கழுத்தில் வைக்கப்பட்டுள்ள மரத்தாலான பாகம் எவ்வாறு அழைக்கப்படும்? (..............................)

**[03] உங்கள் நாளாந்த வாழ்க்கையில் நீங்கள் சந்தித்த ஒரு சிலர் கூறிய வாசகங்கள் கீழே உண்டு. இவற்றைக் கொண்டு அவ்வாசகங்களுக்குரியவர்களை அடையாளங் கண்டு அவர்களுக்கு வழங்கப்படும் பொதுப் பெயர்களை அருகேயுள்ள கூட்டினுள் எழுதுக.**

(i) கீரை..... கீரையோ.. கீரை... கீரை வாங்கலையோ கீரை நல்ல பச்சைக் கீரை.... (......................)
(ii) மாம்பழம்... மாம்பழம்... இருபது ரூபாவுக்கு மூன்று மாம்பழம் வாங்க... வாங்க.. ஓடி வாங்க.... (......................)
(iii) தபால்... தபால்... இது உங்க பெயர் தானே? முகவரி சரிதானா? (......................)
(iv) உங்களுக்கு என்ன செய்யுது, கொஞ்சம் மூச்சு விடுங்கோ.... சரி.... இந்த மருந்தை கவனமாகப் பாவியுங்கோ... நேரத்திற்கு ஒழுங்கா எடுக்க வேண்டும். (......................)
(v) எல்லாரும் உள்ளுக்குப் போங்கோ மிதிபலகையில் ஒருத்தரும் நிற்கக்கூடாது எல்லீரும் ரிக்கற் எடுத்தீர்களா? (......................)

**[04] சரியான விடையைத் தெரிவு செய்க.**

(i) இலங்கையின் தேசியக் கொடி, தேசிய இலட்சினை ஆகியவற்றில் காணப்படும் பிராணியின் உருவம் யாது?
1.புலி 2.சிங்கம் 3.யானை 4.காட்டுக்கோழி.
(ii) புராதன காலத்தில் செய்திகளைக் கொண்டு செல்லப் பயன்படுத்திய பிராணி எது?
1.குதிரை 2.யானை 3.புறா 4.மயில்
(iii) இலங்கைப் பணம் ரூபா ஆயிரத்தில் காணப்படும் பிராணி எது?
1.நாகணவாய் 2.கிளி 3. புறா 4.மயில்
(iv) கால்கள் இல்லாத ஒரு பிராணியாக கருதப்படுவது?
1.கிளி 2.தவளை 3.நத்தை 4.முட்டைப் பூச்சி
(v) அதிகளவு கால்களைக் கொண்ட பிராணி.
1.சிலந்தி 2.மட்டத்தேள் 3.பூரான் 4.அட்டை
(v)  அருகேயுள்ள இசைக்கருவியின் பெயர்
1. வயலின் 2.வீணை
3.கிற்றார் 4.உடுக்கு
(vii)  இந்த இசைக் கருவியில் நாதம் எழுவது
1.வளி நிரல் அதிர்வதால்
2.ஈர்க்கப்பட்ட உலோக இழை அதிர்வதால்
3.தோல் அதிர்வதால்
4.வேறு முறை மூலம் ஆகும்
(viii) கீழ்வரும் இசைக்கருவிகளில் கொட்டற்கருவி எது?

(ix) கோடை காலத்திற்கு மிகவும் ஏற்ற பழத்தைத் தரும் தாவரம் எது?
1.மா 2.வெள்ளரி 3.பூசணி 4.நாவல்
(x) குலையாகப் பழம் தரும் தாவரம் எது?
1.பப்பாசி 2.அன்னாசி 3.முந்திரிகை 4.தோடை
(xi) வீதி ஒன்றின் ஓரத்தில் அவதானிக்கக் கூடியவை
1.மின்கம்பம் 2.தந்திக் கம்பம் 3.பெருவிருட்சம் 4.மேற்சொன்ன மூன்றும்
(xii) பயணிகளின் பிரயாணத்திற்கு பயன்படுத்தாத வாகனம்
1.புகையிரதம் 2.பஸ்வண்டி 3.அம்புலன்ஸ் 4.கார்
(xiii) தான் செல்லும் பிரயாணப் பாதையில் வேறுபட்ட வாகனம்
1.புகையிரதம் 2.பஸ்வண்டி 3.அம்புலன்ஸ் 4.கார்
(xiv) வீதியில் ஏற்படத்தக்க விபத்து
1.தீ விபத்து 2.மின்கசிவு 3.குண்டு வெடித்தல் 4.வாகன விபத்து
(xv) பின்வரும் எந்த உருவில் நீர் வெளியேறாது?


**[05] கீழ்வரும் அட்டவணையில் நிரப்பப்பட்டுள்ள தகவல்களை ஆதாரமாகக் கொண்டு இடைவெளி நிரப்புக**

| | குடும்பத் தேவை | சேவை நிலையம் | பெற்றுக் கொண்ட சேவை |
|---|---|---|---|
| (i) | வதிவிடத்தை உறுதி செய்தல் | | வதிவிடத்தை உறுதி செய்யும் அத்தாட்சிப் பத்திரம் பெறுதல் |
| (ii) | முத்திரை விலைக்கு வாங்குதல் | அஞ்சல் அலுவலகம் | |
| (iii) | | மாவட்ட தேர்தல் ஆணையாளர் அலுவலகம் | வாக்காளர் இடாப்பின் பிரதி ஒன்றைப் பெற்றுக் கொள்ளுதல் |
| (iv) | சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பித்தல் | | சேமிப்புக் கணக்கு ஆரம்பிக்கப் பட்டது |
| (v) | போலியோ ஊசியை ஏற்றுதல் | | போலியோ ஊசி ஏற்றப்பட்டமை |

**[06] கீழ்வரும் கூற்றுக்கள் சரியாயின் "R" எனவும் பிழையாயின் "W" எனவும் கூட்டுக்குள் எழுதுக.**

(i) ரகுவரனின் பிறந்த திகதி 31.02.2003 ஆகும். ( )
(ii) திகதி, விகடகவி ஆகிய சொற்களை இடமிருந்து வலமாகவோ அல்லது வலமிருந்து இடமாகவோ எப்படி வாசித்தாலும் பொருள் மாறாது ( )
(iii) திரு.பர்ணான்டோ சேதுகாவலர் அவர்கள் கொழும்பு செல்வதற்காக நியம நேரம் 24.00 மணியளவில் முகமாலை சென்றார். ( )
(iii) ஒருவன் தான் நிற்கும் இடத்தில் இருந்து கிழக்கு நோக்கி 500m தூரம் நடந்து பின் மேற்காக 500m தூரம் நடப்பின் இப்போது அவன் ஆரம்ப நிலையிலேயே உள்ளான். ( )
(iv) அண்மையில் புதிய பாப்பரசர் தெரிவு நடைபெற்றது ( )

**[07] கீழே கூட்டுக்குள் தரப்பட்டுள்ள உயிரினங்களின் பட்டியலை அவதானியுங்கள்.**

நாரை, புலுணி, அழுங்கு, மட்டி, கணவாய், நீர்யானை கருங்குரங்கு, தவளை, முஞ்சூறு, தேரை, உடும்பு, தூக்கணாங்குருவி, கறையான், முயல்

(i) மேலே தரப்பட்டவற்றுள் நீர்வாழ் உயிர்கள் எவை? ..............................
(ii) மேலே உள்ளவற்றுள் பறக்கும் இயல்பு கொண்டவை எவை? ..............................
(iii) நீரிலும் நிலத்திலும் வாழத்தக்க அங்கிகள் எவை? ..............................
(iv) தமக்குரிய வாழிடத்தை தாமே தயாரித்து வாழும் உயிரினங்கள் எவை? ..............................
(v) மேலே உள்ள அங்கிகளுள் அதிக எண்ணிக்கையான முட்டைகளை ஒரே தடவையில் இடும் அங்கி எது? ..............................

**[08] தாவரங்களின் கனி, விதை என்பன ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு எடுத்துச் செல்லப்படுதல் கனி, விதை பரம்பல் என அழைக்கப்படும். கனி விதை பரம்பலில் பங்கேற்கும் காரணிகளும் பரம்பலடைய உள்ள கனி விதைகளின் படமும் கீழே தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு கனி, விதையும் எக்காரணியால் பரம்பலடைகின்றதோ அக்காரணி உள்ள கூட்டினுள் (✓) என அடையாளம் இடுக.**

| | கனி / விதை | நீரால் பரம்பல் | காற்றால் பரம்பல் | விலங்குகளால் பரம்பல் |
|---|---|---|---|---|
| (i) |  | | | |
| (ii) |  | | | |
| (iii) |  | | | |
| (iv) |  | | | |
| (v) |  | | | |

(...ஆம் பக்கம் பார்க்க)

# வினாத்தாள் 15 இன் விடைகள்

01. i)கவிஞர் அழவள்ளியப்பா ii)சிறுவர்களாகிய நாம் நல்ல நல்ல நூல்களை தேடிக் கற்க வேண்டும். iii)சிறுவர்களுக்கு (நூல் வாசிப்போரை) iv)பள்ளம் - வெள்ளம் தேடி - நாடி.

02. i)மக்கள் ii)கிளி iii)எறும்பு

03. எறும்பு

04. i)தேன் ii)பழம் iii)மக்கள் iv)நூல்

05. i)நாடு ii)பள்ளம் iii)நிறைந்த iv)சோலை

06. i)Ant ii) People iii)Sugar iv)Books

07. i)குளிர் ii)எழுத்து iii)காது iv)மாமி v)வெண்களி

08. i)Bird ii)பட்சி/புள் iii)புறா iv) கிளி/மைனா v)ஆந்தை/வல்லூறு vi)கழுகு vii)வௌவால் viii)நன்மை:- பயிரிற்கு தீமை செய்யும் அங்கிகளை அழித்தல் தீமை:- பயிர் அறுவடைகளை சேதமாக்கல்

09. i)காகம் ii)கிளி

10. i)Black ii) Green


11. i)3 ii)2 iii)2 iv)1 v)3 vi)3 vii)3 viii)1 ix)1 x)2 xi)3 xii)2 xiii)1 xiv)1 xv)1

12. i) x ii) y iii) y

13. i)A ii) B iii) A iv) A v) B vi) A vii) A

14. i)A- நீர் B -மெழுகுதிரி ii)பிரகாசம் குறைவடைந்து பின் அணையும் iii)நீர்மட்டம் உயரும் iv)மெழுகுதிரி தொடர்ந்து எரியும் v)ஓட்சிசன் vi)ஓட்சிசன்

15. i)குறித்த ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட ஆகாய விமானங்களின் எண்ணிக்கை ii)1981, 1982, 1984 iii)1984 v)




16. i)உரு I ii)உரு III iii)உரு II

17. i)மு.ப.9.30 ii)பி.ப.4.45 iii)மு.ப.10.45 vi)மு.ப.11.15 v)பி.ப.5.15

18. i)12 சதுர சென்ரி மீற்றர் ii)14 சதுர சென்ரி மீற்றர் iii)14 சதுர சென்ரி மீற்றர்

19. i)தெற்கு ii)தென்கிழக்கு/அக்கினிமுலை iii)மேற்கு iv)வடகிழக்கு/ஈசானமூலை v)தெற்கு

20. * எழுத்துப் பிழைகளின்றி இருத்தல். * கூறியது கூறலாக இருககக் கூடாது. * தலைப்பிற்கு பொருத்தமானதாக இருக்க வேண்டும். * எழுத்து மொழியில் மட்டுமே எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

# தரம் — 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

### வினாத்தாள் இல:14

**கூடிய புள்ளி ஒழுங்கில் மாணவர் பெயர் விப்ரம் வருமாறு:**

| | |
|---|---|
| 01.கி.மதுளா | யா/நெ.மெ.மி.த.க.பூடசாலை. |
| 02பி.ஜோதிகா | யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை. |
| 03.ச.பாமினி | யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை |
| 04.ரா.திவாகர் | யா/வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம். |
| 05.பு.வினஜா | யா/வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம். |
| 06.ப.மதூசன் | யா/புனித ஜோன். பொஸ்கோ வித்தியாலயம. |
| 07.த.சானுஜன் | யா/தும்பளை சிவப்பிரசாகம் மகா வித்தியாலயம் |
| 08.இ.ராகவன் | யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை. |
| 09.சி.ஜெயகுமார் | யா/வல்வை அ.மி.த.க பாடசாலை. |
| 10.கு.றஜீவன் | யா/யாழ்.மத்திய கல்லூரி. |
| 11.ஸ்ரீ.ஸ்னேகா | யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க.பாடசாலை. |
| 12.சி.ஆனந்தப்பிரியா | யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை |
| 13.பு.நிசாந்தினி | யா/வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி. |
| 14.வி.ஆரணி | யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம. |
| 15.ஜெ.மதுஷனா | யா/சோதி வேம்படி வித்தியாசாலை. |
| 16.செ.சுலக்சன் | யா/விவேகானந்தா வித்தியாலயம். |
| 17.அ.பாலமுரளிகிருஷ்ணா | யா/வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி. |
| 18.க.போல்றாஜ் | யா/இணுவில் மத்திய கல்லூரி. |
| 19.கி.விதுசா | யா/சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம். |
| 20.சி:லதாயினி | யா/இராமநாதன் கல்லூரி |
| 21.செ.அனோஜன் | யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம். |
| 22ப.ஸ்ரெபான் | யா/யாழ்.மத்திய கல்லூரி. |
| 23.றெ.அலெக்சன் | யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி. |
| 24.பு.பிரியதர்ஷன் | யா/நவாலி மகா வித்தியாலயம் |
| 25.கு.சுரேன் | யா/மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம். |
| 26.ச.பிரணவன் | யா/நவாலி சென்பீற்றர்ஸ் றோ.க.த.க.பாடசாலை. |
| 27.தி.யதுர்சன் | யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம. |
| 28.ந.சிவகுலன் | யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம. |
| 29.தி.ஷரவணபவன் | யா/சுன்னாகம் இராமநாதன் கல்லூரி. |
| 30.கு.அலெக்ஸ் | யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி. |
| 31.ஜெ.சுஜனிகா | யா/மானிப்பாய் நவோதய கல்லூரி |
| 32.க.சங்கீதா | யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி. |
| 33.ச.கம்சலா | யா/இணுவில் மத்திய கல்லூரி. |
| 34.வி.சுலோஜன் | யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை |
| 35.க.கீதா | யா/வல்லை மகளிர் ம.வித்தியாலயம். |
| 36.இ.வைஸ்ணவி | யா/புனிதஜோன் பொஸ்கோ வித்தியாலயம். |
| 37.தி.சங்கீதா | யா/புனித ஜோன் பொஸ்கோ. |
| 38.வி.சிந்துஜன் | யா/இணுவில் மத்திய கல்லூரி |
| 39.சி.கோமதி | யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம. |
| 40.சி.கேமாவதி | யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம. |

(.06.ஆம் பக்கத் தொடர்ச்சி)

[09]
(i) கீழே தரப்பட்டுள்ள எழுத்து வடிவங்களில் சிங்கள மொழியில் அமைந்த எழுத்து வடிவின் கீழ்க் கோடிடுக.

1.தை 2.ணீ 3.ஷா 4. ච

(ii) சிங்கள மொழியில் அமைந்த சொல்லின். கீழ்க் கோடிடுக.

1.Ant 2.ஜம்பு 3. ඌමා 4.ஜோடி

(iii) தமிழில் 'ம' என்னும் எழுத்தின் ஓசையுடன் ஒத்த ஓசையுடைய சிங்கள எழுத்து

1) ම 2) ඉ 3) ව 4) ස

(iv) வேறுபட்டு நிற்கும் எழுத்து வடிவம்.

1.E 2. ච 3.G 4.R


(v) 'அம்மா' என்னும் சொல்லை இதே ஓசையுடன் ஆங்கில எழுத்துக்களைக் கொண்டு எழுதின் **Amma** என அமையும். இதேபோல் சிங்கள எழுத்துக்களைக் கொண்டு எழுதின் எவ்வாறு அமையும்.

1) අම්ම 2) අම්මා 3) අසක් 4) මම

**[10] பின்வரும் வினாக்களில் கூறப்பட்டுள்ள விடயங்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடைப்புக்குள் அடையாளமிடுக.**

(i) "சிறுநூலோடி"என்னும் செயல் தையல் தொழிற்பாட்டுடன் தொடர்புபட்டது. ( )
(ii) ஒரு நாட்டின் தேசியக் கொடியானது தேசிய ஒற்றுமையைப் பிரதிபலிக்கும். ( )
(iii) களிமண்ணை பற்றிக் வேலைகளுக்கு பயன்படுத்தலாம் ( )
(iv) அண்மையில் உலகைப் பேரழிவுக்கு உள்ளாக்கிய பேரலை "சுனாமி" அலையாகும் ( )

**[11] வினாக்களுக்கு விடையளிக்க கீழ்வரும் அட்டவணையை அவதானிக்க.**




| | | | |
|---|---|---|---|
| ரூபா 56.00 | ரூபா 38.00 | ரூபா 52.00 | ரூபா 44.00 |

(i) 1 கிலோகிராம் பூசணியின் விலை யாது? (..............................)
(ii) 1 கிலோகிராம் கத்தரிக்காயின் விலை யாது? (..............................)
(iii) 1 கிலோகிராம் தக்காளியின் விலை யாது? (..............................)
(iv) 1 கிலோகிராம் மிளகாயின் விலை யாது? (..............................)
(v) மிகவும் குறைந்த விலையுடைய மரக்கறி எது? (..............................)
(vi) கூடிய விலையுடைய மரக்கறி வகையில் இரண்டு கிலோகிராம் வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவைப்படும்? (..............................)
(vii) மேற்படி மரக்கறிவகையில் ஒரு கிலோகிராம் வாங்கும் போது எந்த மரக்கறி எண்ணிக்கையில் அதிகமாகக் கிடைக்கும்? (......................)
(viii) மேற்படி மரக்கறி வகைகளுள் கொடியின மரக்கறி வகை எது? (..............................)
(ix) மேற்படி மரக்கறி வகைகளுள் பருமனில் விசாலமான மரக்கறி எது? (..............................)
(x) 100 ரூபா பணத்தைக் கொடுத்து மிளகாய் ஒரு கிலோவும் தக்காளிக்காய் 1 கிலோவும் வாங்கினால் கடை முதலாளி மீதியாக எவ்வளவு தருவார்? (..............................)
(xi) இம்மரக்கறி வகைகளில் பூசணி 1 கிலோ, தக்காளிக்காய் 2 கிலோவும் வாங்க எவ்வளவு பணம் தேவை? (..............................)

**[12] கீழ்வரும் அட்டவணையை நிரப்புக.**

| விலைப்பட்டியல் | | பொருள் பட்டியல் | அளவு | பெறுமதி | செலுத்திய பணம் | மீதி |
|---|---|---|---|---|---|---|
| (i) 1kg சீனி | 35.00 | சீனி | 150 g | | 10.00 | |
| (ii) 500 ml எண்ணெய் | 17.50 | எண்ணெய் | 2l | | | 30.00 |
| (iii) 1 டசின் பென்சில் | 30.00 | பென்சில் | 3 | | | 2.50 |
| (iv) 10 பிடி கீரை | 100.00 | கீரை | 3 | | 50.00 | |
| (v) ½ m சீத்தை | 45.50 | சீத்தை | 2¾m | | 250.25 | |
| (vi) 1 றீம் பேப்பர் | 200.00 | பேப்பர் | 50 பேப்பர் | | | 0.00 |
| (vii) 50 g தேயிலை | 7.50 | தேயிலை | 450g | | 70.00 | |
| (viii) ¼ l பெற்றோல் | 19.50 | பெற்றோல் | 5 L | 390.00 | | 10.00 |
| (ix) 10 cm நாடா | 1.50 | நாடா | 1½m | | 25.00 | |
| (x) 4 தேசிப்பழம் | 12.00 | தேசிப்பழம் | 1டசின் | | | 4.00 |

**[13] ''நாம் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைய வேண்டுமாயின்''** என்னும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய் பயனிலைகளுடன் அமைந்த 06 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது 04 சொற்களையாவது கொண்டிருக்க வேண்டும்.

## 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் - 16

**மாணவர் முழுப்பெயர் :** ........................................

**பாடசாலையின் பெயர் :** ........................................

**வீட்டின் முகவரி :** ........................................

மாணவர்களே! உங்கள் விடைகளை 20.07.2005 இற்கு முன் அனுப்பிவைக்கவும. உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

வலம்புரி
கல்விப்பகுதி,
வினாத்தாள் இல - 16
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

குறிப்பு :- மாணவர்களின் நலன்கருதி இவ் வினாத்தாள்களை வைத்துக்கொண்டு, வினாக்களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாகக் குறிபபிடவும். பாடசாலையின பெயரினை முழுமையாக எழுதவும்.

# பரப்பளவோ பெரிது; பணியாளர் தொகையோ சிறிது

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஒன்றுதான் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவு. அதி கஷ்டப்பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்ட இரண்டு பிரிவுகளில இது முதன்மை பெறுகின்றது. இங்கே உள்ள பிரதேச செயலகத்தில் ஆளணிகள் மிகக் குறைவாகக் காணப்படுவதால் நாளாந்த வேலைத்திட்டங்களையோ, வருடாந்த அபிவிருத்தி வேலைகளையோ, நிறைவேற்றுவதில் பல தரப்பட்ட நெருக்கடிகளை எதிர்நோககுவதாக அதன் பிரதேச செயலாளர் கவலை தெரிவிக்கின்றார்.

இதுவிடயமாக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் ம.ஜெகூ கருத்துத் தெரிவிக்கையில் இப்பிரதேச செயலகத்தில் 13 எழுதுநர்கள் கடமையாற்றவேண்டிய இடத்தில் 04 எழுதுநர்களும் ஒரு தட்டெழுத்தாளரும், 15கிராமசேவை உத்தியோகத்தர்கள் கடமையாற்ற வேண்டிய இடத்தில் 11 கிராமசேவை உத்தியோகத்தரும், ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தரும் ஒரு அபிவிருத்தி உத்தியோகத்தரும் ஒரு சமூக சேவை உத்தியோகத்தரும் ஒரு விளையாட்டு உத்தியோகத்தரும் மாத்திரமே கடமையாற்றுகின்றார்கள்.

இப்பிரதேச செயலகத்தில் ஒரு நிர்வாக உத்தியோகத்தரோ, நிர்வாக உதவியாளரோ, உதவித் திட்டமிடல் அதிகாரியோ, குடியேற்ற உத்தியோகத்தரோ, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரோ, கணக்காளரோ, புள்ளிவிபர உத்தியோகததரோ, சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தரோ எவருமே இல்லை.

காணித் திணைக்களத்தைப் பொறுததளவில் மீள நியமனத்தில் காணி உத்தியோகத்தரும் இரு வெளிக்கள உத்தியோகத்தர்களும் மட்டுமே கடமையாற்றுகின்றார்கள். அங்கே எழுதுநர்கள் எவரும் இல்லை.

இப்பிரதேசம் பரந்த பாரிய ஒரு பிரதேசமாகும். 494.ச.கி மீற்றர் பரப்பளவையும் 16ஆயிரத்து 447நிரந்தர மகக்ள் தொகையையும் 3ஆயிரத்து 723 குடும்பங்களையும் வெளி மாவட்டங்களில் இருந்து இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்

**செய்திக் கட்டுரை**

பெயர்ந்த 1521 குடும்பங்களின் 7 ஆயிரத்து 214அங்கத்தவர்களையும், இம்மாவட்டத்தில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளில் இடம் பெயர்ந்த 284 குடும்பங்கள் மூலமாக 1203அங்கத்தவர்களையும் உள்ளடக்கியதுடன் 63 சிறிய கிராமங்களையும் 15கிராம சேவையாளர் பிரிவுகளையும் தன்னகத்தே கொண்டதே மாந்தை கிழக்கு பிரதேசமாகும்.

இப்பாரிய பிரதேசத்தையும் இம் மககள் தொகையையும் நிர்வகிக்க வேணடிய பாரிய நிர்வாகக் கடமை இப் பிரதேச செயலகத்தையே சாரும. அதனால் இச் செயலாளர் அலுவலகத்தின், ஆளணி பற்றாக் குறையால் வேலைத்திட்டங்களையோ,

## மாந்தை பிரதேச செயலர் பிரிவின் இன்றைய அவலநிலை

அன்றாட வேலைகளையோ நிறைவேற்றுவதாக இருந்தால் ஒருவர் பலருடைய வேலைகளை மட்டுமல்ல, பிரதேச செயலாளரே பகலில் மட்டுமல்லாமல் இரவிலும் ஓய்வின்றி வேலை செய்வதை அன்றாடம் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

முல்லைத்தீவு, மாவட்டத்தின் அதிகஷ்டப் பிரதேசமான பிரதேசத்தில் ஓர் அரசாங்க உத்தியோகத்தர் கடமையாற்றவேணடிய ஆகக் கூடிய காலம் இரண்டு வருடங்களாகும், ஆனால் இப் பிரதேச செயலகத்தில் பத்து வருடஙகளுக்கு மேலாகவே கடமை யாற்றுகின்றார்கள். இவர்கள் இடமாற்றம் கோருமபோது அவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டாலும் அந்த இடங்களுக்குப் புதியவர்கள் வர மறுகின்றார்கள். இங்கே எந்த விதமான அடிப்படை வசதிகளும் இல்லாததே இதறகுக் காரணமாகும. அரசாங்க உத்தியோத்தர்கள் தங்குவதற்கு விடுதிகள் எதுவும் கிடையாது. இதனாலேதான் இங்கே கடமையாற்ற எவரும் முன் வருவதில்லை. இந்த நிலைமையைக் கருத்தில்கொண்டு அரசாங்கமோ, அரச சார்பற்ற நிறுவனஙகளோ இங்கே அரச ஊழியர்கள் தங்குவதற்குரிய விடுதி வசதிகளை, ஏற்படுத்திக் கொடுக்க முன்வர வேண்டும். இதுவே இப்பிரதேசத்துக்கு செய்ய வேண்டிய தலையாய கடமையாகும்.

குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் உள்ள நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவு 47 ச.கி.மீற்றர் பரப்பளவை மட்டும் கொண்ட ஒரு பிரதேசமே. அங்கே 03கிராம சேவையாளர் பரிவு மட்டுமேயுண்டு. ஆனால் அப்பிரதேச செயலாளர் அலுவலகத்தில் 20 சமுர்த்தி உத்தியோகத்தர் உட்பட பல உத்தியோகத்தர்கள் கடமையாற்றுகின்றார்கள் என்பது குறிப்பிடக்கூடிய ஒன்று. □

**வே.ம.இந்திரநாதன்**
**முல்லைத்தீவுச் செய்தியாளர்**

### விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேசசபை பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று வியாழக்கிழமை பி.ப.1.00மணிக்கு மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை விளையாட்டு மைதானத்தில வலிவடக்கு பிரதேசசபை செயலாளர் திருமதி ஸ்ரீ.மாணிக்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவிற்கு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சோ.சேனாதிராஜா பிரதம விருந்தினராகவும் மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவரும், வலி வடக்குப் பிரதேச சபை முன்னாள் தலைவருமான திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினாகளாக தெல்லிப்பழை கோட்டக் கல்வி அலுவலக உதவிக்கல்விப் பணிப்பாளா ச.கைலாசநாதன், மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை அதிபர் கு.இராசநாயகம், தெல்லிப்பழைப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.சரவணன், மல்லாகம் மததி கிராம அலுவலர் சு.பூபால சிங்கம், வலி.வடக்கு பிரதேசசபை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செ.சிவயோகம், வலி.வடக்கு முன்பள்ளி பிரதேச இணைப்பாளர் செல்வி செ.செல்வ ரஞசனா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ந-2)

### அகண்டநாம ஜெபயாக பூஜை

(யாழ்ப்பாணம்)

கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி கூட்டுறவு அபிவிருத்தி இந்துசமய அலுவல்கள் அமைச்சு மற்றும் கலவி, வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு உதவும் அமைச்சும் இராஜகிரிய மஹாவீர பத்திரகாளி அம்மன் ஆலய அறங்காவலர் சபையினரும் இணைந்து நடாத்தும் "அகண்ட நாம ஜெபயாக பூஜை" எதிர்வரும் 18,19,20,21ஆம் திகதிகளில் அதிகாலை 6.30மணி முதல் பி.ப.2.30மணிவரை தொடர்ச்சியாக 72மணித்தியாலங்கள் இராஜகிரிய ஸ்ரீமஹா வீரபத்திரகாளி அம்மன் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

நடந்து முடிந்த சனி மாற்றத்தின்படி நாட்டின் பலவித துன்பங்களும், குழப்பங்களும் பிரச்சினைகளும் நீங்கி இயற்கை அழிவுகளும் அனர்த்தங்களும் இடம்பெறாதிருக்க வேண்டும் என்பதற்காகவே இந்த யாகபூசை நடத்தப்படவுள்ளது.(க)

# மின்சாரசபை கட்டணங்கள் செலுத்தும்போது ஏற்படும் சிக்கல்களை நீக்குவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

மின்சாரக் கட்டணங்களை செலுத்துவது தொடர்பாகத் தோன்றியுள்ள சிககல்களை குறைப்பதற்கான புதிய வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த இலங்கை மின்சாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போது தபால் நிலையங்கள் மற்றும் நிதி நிறுவனங்களில் மின் கட்டணத்தை செலுத்திவருகின்ற போதிலும் அது தொடர்பான விபரங்கள் தலைமைக்காரியாலயத்திற்குக் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதாக இலங்கை மின்சாரசபையின் பொது முகாமையாளர் றஞ்சித் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இதன்படி செலுத்தப்படும் அந்தக் கட்டணங்கள் செலுத்தப்படாததாக கருததில்கொண்டு பாவனையாளர்களுக்கு மீண்டும் மின் கட்டணவிபரம் வழங்கப்படுவதினால் அவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக றஞ்சித் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக சில சந்தர்ப்பங்களில் மின் விநியோகத்தை துண்டிபபதறகான சிவப்பு அறிவிப்பை பாவனையாளர்களுக்கு அனுப்ப வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுவதாகவும் தெரிவித்தார்.

இந்நிலையில் பிராந்திய மின் பொறியியலாளர் அலுவலகங்கள ஊடாக மின்கட்டணத்தை செலுத்துவதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த நிலையங்கள் யாவும் விசேட பாவனையாளர் வலையமைப்பின் ஊடாக தலைமைக்காரியாலயத்துடன் இணைக்கப்படும் என்று றஞ்சித் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை 28பிராந்திய அலுவலகங்களில் இதற்கான உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் இம்மாதம முதல் டிசம்பர்மாத இறுதிக்குள் நாட்டின் சகல பகுதிகளும் உள்ளடங்கும் வகையில் இவ்வாறான மத்திய நிலையங்கள் உருவாக்கப்படும் என்றும் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

மின் கட்டணங்களை தற்போது தபால் நிலையம் மற்றும் நிதி நிறுவனங்களின் ஊடாக செலுத்தும் போது அந்த நிதி மின்சாரசபைக்குக் கிடைக்க இரண்டு மாதம் செல்வதாகவும் றஞ்சித் பொன்சேகா தெரிவித்துள்ளார். (க-9)

# வீட்டுக் கழிவுப் பொருட்களை கொம்போஸ் உரமாக மாற்றும் பிளாஸ்டிக் பரல்கள்

(கொழும்பு)

வீட்டுக் கழிவுப் பொருட்களை கொம்போஸ் உரமாக மாற்றும் பிளாஸ்டிக் பரல்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன.

சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார தலைமையில் அவரது உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்ற இந்த வைபவத்தின்போது சுற்றாடல் மற்றும் இயற்கை வள அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி கொம்போஸ் பரல்களை வழங்கினார்.

இநநிகழ்வில் அமைச்சர்களான பீலிக்ஸ் பெரேரா, மில்ரோய் பெர்னாந்து மற்றும் பிரதியமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, பண்டு பண்டார, பாராளுமன்ற உறுப்பினர் ரி.மகேஸ்வரன், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகமும், மத்திய சுற்றாடல் அதிகார சபைத்தலைவருமான திலக் ரணவிராஜா உடபட உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுசரணையுடன், சுற்றாடல் இயற்கை வள அமைச்சு இதனை வழங்கியுள்ளது. இது தொடர்பாக அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி இங்கு கருத்து தெரிவிக்கையில்,

கழிவுப் பொருட்களை இவ்வாறு உரமாக மாற்றுவதன் மூலம் குப்பைகளை அகற்றுவது குறித்த பிரசசினைகளை தவிர்க்க முடிவதுடன் சுற்றடாலையும் பாதுகாக்க முடியும் என்றார்.

கொழும்பு, கல்கிசை போன்ற நகர சபைகள் உட்பட ஏனைய நகர பிரதேச சபைகள் குபபை கூழஙகள் நிறைவதனால் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன.

சில நகர பிரதேச சபைகளுக்கு குப்பைகளை கொட்டுவதற்கும் இடங்கள் இல்லை இவ்வாறான பிரச்சினைகளை தடுப்பதற்கே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு 225பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இவை வழங்கப்படவுள்ளன.

இதனை சிறந்த முறையில் பராமரிப்பதன் மூலம் நகர சபைகளின் வேலைகள் குறையும் இதே வேளை பாடசாலைகள் பொலிஸ் நிலையங்கள், அரசாங்க திணைக் களங்கள், வைத்தியசாலைகளுக்கும் இவை வழங்கப்படவுள்ளன.

முல்லேரியா மனநோய் வைத்திய சாலைக்கு 20 பரல்கள் வழங்கப்பட்டன இதேவேளை, வடக்கு-கிழக்கு உட்பட சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்ப்ட்ட பிரதேசங்களுக்கு 500பரல்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நிதியுதவியை யுனிசெவ நிறுவனம் வழங்கவுள்ளது என றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

# திருமலைத் தாக்குதலைக் கண்டித்து கிழக்குப் பல்கலைச் சமூகம் ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

திருகோணமலை உப்புவெளியில் விடுதலைப் புலிகளின் மீது மேற கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து நேற்று முன்தினம முற்பகல் கிழக்குப் பல்கலைக்கழகம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

பலகலைக்கழக சமூகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் மாணவர்கள் விரிவுரையாளர்கள் மற்றும் ஊழியர்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட பொதுக் கட்டமைப்பு ஒப்பந்தத்தை உடனடியாக அமுல்செய்ய வேண்டும் என்றும் இவ் ஆர்ப்பாட்டத்தின்போது கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

"சிறிலங்கா அரசே தமிழினத்தின்மீது மேற்கொண்டுவரும் அராஜகத்தை உடன் நிறுத்து" "சிறிலங்கா இராணுவமே நிராயுதபாணிகளான போராளிகளைக் கொல்லாதே" ஆகியன உட்பட பல்வேறு வாசக அட்டைகளை ஏந்தியவாறு மாணவர்கள் உட்பட பல்கலைக் கழகச் சமூகம் நடத்திய வீதி ஆர்ப்பாட்டம காரணமாக மட்டக்களப்பு வாழைச்சேனை வீதியில் குறிப்பிட்ட இடத்தில ஒரு மணித்தியாலம போக்குவரத்துக்கள் யாவும் தடைபபட்டிருந்தது. (ந-4)

# சுனாமி நிவாரண நிதி செலவினம் அரச கணக்காய்வுக்கு உட்படும்

(கொழும்பு)

சுனாமி நிவாரண சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியின் செலவினங்கள் அனைத்தும் அரசாங்கக் கணக்காய்விற்கு உட்பட்டிருக்கும் என்று சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசன் உயர்நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

சுனாமி நிவாரணசபை சம்பந்தமான உடன்படிக்கை ரத்துச்செய்யப்பட வேண்டும் என்ற வகையில் ஜே.வி.பி.பாராளுமன்ற உறுப்பினர் சமர்பித்த மனுவை உயர்நீதிமன்றம் ஆராய்நத போது சட்டமா அதிபர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

சுனாமி நிவாரண நிதியம் திறைசேரியினதும் உலக வங்கியினதும கட்டுப்பாட்டில் இருந்துவரும் என்று குறிப்பிட்ட அவர் இந்தச் சொத்துக்கள் அனைத்தும் இலங்கை மக்களின் சொத்துக்களாக கருதப்படும் என்றும் கூறியுள்ளார்.

அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிதி சட்டங்களின் அடிப்படையிலேயே சுனாமி நிவாரண நிதி செலவிடப்படும் என்றும் அவா உறுதிகூறியுள்ளார். (க-2)

# த.புனர்வாழ்வுக் கழகத்தால் குளிரூட்டி வாகனம் அன்பளிப்பு

(திருகோணமலை)

ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட திருகோணமலை, மூதூர், கட்டைபறிசசான் கிராம மீனவக் குடும்பங்களுககு அவர்களது தொழிலை ஊககிவிக்கும் முகமாகவும் தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாகவும் திருகோணமலை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் குளிரூட்டி வாகனம் ஒன்று நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

கட்டைபறிச்சான் மீனவ சங்கத்தில் வைத்து சங்கத் தலைவருடன் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் இந்த குளிரூட்டி வாகனத்தைக் கையளித்தார்.

இவ் வாகனத்தின் மூலம் கட்டைபறிச்சான் பிரதேசத்திலுள்ள 318 மீனவக் குடும்பங்களுக்கு நன்மை கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் திருகோணமலை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளா விஜயகுமாரும் கலநதுகொண்டார். (க-7)

# யாழ். மாவட்டத்தில் மிதிவெடிகளினால் இதுவரை 684பேர் பாதிப்பு; 72பேர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இதுவரை காலமும் 684 பேர் மிதிவெடிகளினால் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட செயலகத்தில் இயங்கும் மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தின் புள்ளி விபரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

மிதிவெடியால் பாதிப்புக்குள்ளான 684 பேரில் 72 பேர் உயிரிழந்துள்ளதுடன், 612பேர் காயமடைந்துள்ளனர். அத்துடன், யாழ். மாவட்டத்தில் 2005 ஆம் ஆண்டு மிதிவெடியினால் 14 பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுள் ஒருவர் இறந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த மே மாதம் 31ஆம் திகதி சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கச்சாய்ப் பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியின் அருகாமையிலிருந்த வெடி பொருள் ஒன்றை எடுத்துவந்து கிணற்றுக்கட்டில் தேய்த்தவேளையிலேயே அவ் வெடிபொருள் வெடித்து பிரஸ்தாப நபர் உயிரிழந்தார்.

இதேவேளை, இலங்கை முழுவதிலும் மிதிவெடியினால் 1274 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இவர்களில் 194பேர் உயிரிழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ற-19)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், பாவனையாளர் அலுவலக அதிகாரசபை சட்டத்தின் கீழ் இன்று வியாழக்கிழமை மு.ப.10.00 மணிக்கு ஆங்கில மருந்து விற்பனையாளர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளார்.

அரச அதிபர் பணிமனையில் நடைபெறும் இந்த முக்கிய கலந்துரையாடலுக்கு யாழ்ப்பாணத்திலுள்ள சகல ஆங்கில மருந்து விற்பனையாளர்களையும் தவறாது கலந்துகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. (க)

## இலங்கைக்கு சட்டவிரோதமாக கடற்பல்லிகளை கடத்திய 4 மீனவர்களும் விடுதலை

(மன்னார்)

இலஙகைக்கு சட்டவிரோதமாக படகு மூலம் கடற்பல்லிகளைக் கடத்திய நான்கு இராமேஸ்வர மீனவர்களையும் மன்னார் மாவட்ட நீதவான் என்.எம்.அப்துல்லா கடந்த திங்கட்கிழமை விடுதலை செய்துள்ளார்.

தலை மன்னார் கடற்படையினரால் கடந்த மேமாதம் 25ஆம் திகதி அதிகாலை இலங்கை கடற்பரப்பில் வைத்து நான்கு இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட வேளையில குறித்த நான்கு மீனவர்களினால் இலங்கைக்கு கடத்திவரப்பட்ட பலலாயிரக்கணக்கான ரூபா பெறுமதியுடைய கடற்பல்லிகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

பின்னர் இந்திய மீனவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட கடற்பல்லிகள் மற்றும் மீன்பிடி வலைகள் ஆகியவற்றை கடற்படையினர் தலை மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதனையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் குறித்த நான்கு மீனவர்களையும் மன்னார் நீதிமன்றில் ஆஜர்செய்த வேளையில் மீனவர்களை விளக்க மறியலில் வைக்குமாறும் கடற்பல்லிகளை கொழும்பு சுங்கத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்குமாறும் மன்னார் நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, 4 இந்திய மீனவர்களும் மீண்டும் நேற்று முன்தினம் ம்ன்னார் நீதிமன்றத்தில் நீதவான் என்.எம்.எம். அப்துல்லா முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

மீனவர்களை விசாரணைசெய்த நீதவான அவர்களை விடுதலை செய்து இந்தியாவிற்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டார். அத்துடன் தற்பொழுது நீதிமன்றத்தின் உததரவின் பிரகாரம் தலைமன்னாா கடறபடை வசமுள்ள குறித்த மீனவர்களினால் செலுத்திவரப்பட்ட இயநதிர இழுவைப்படகினை இராமேஸவரததிலுள்ள அதன் சட்ட பூர்வ உரிமையாளரிடம் கையளிக்குமாறும் நதவான் தலைமன்னார் பொலிஸாருக்கு உத்தரவிட்டார் என்றும அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-7)

## நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் காணியில் 50 வருட குத்தகை அடிப்படையில் நல்லூர் பிரதேச செயலகத்திற்கு கட்டடம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்தின ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேறறு நடைபெற்ற நல்லூர் பிரதேச செயலா திருமதி சு.தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈழவேந்தன், யாழ். மாவடட அரச அதிபர் கே.கணேஷ், நல்லூர் பிரதேச சபைச் செயலாள்ர் வைரமுத்து, கிராமசேவையாளர்கள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள் உடபட மற்றும் பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

இவ் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் முக்கியமாக நல்லூர் பிரதேச செயலகத்திற்கான புதிய கட்டடத்தை நல்லூக் கந்தசுவாமி ஆலயக் காணியில் குத்தகை அடிப்படையில் நீதிமன்றத்தின் அனுமதியுடன் அமைப்பது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட்டது.

கோண்டாவில், கொக்குவில் அபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் நல்லூர் பிரதேச செயலகக் கட்டடம் திருநெல்வேலிப் பகுதியில் அமைக்கவேண்டும் எனத் தெரிவித்தபோதும் இப்பகுதியில் கட்டடததைஅமைப்பதற்கான காணியை வழங்குவதற்கு பொதுமக்கள் இணக்கம் தெரிவிக்காததை அடுத்தே இறுதியில் அனைவரதும் விருப்பத்திற்கு அமைவாக நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்னாள் உளள ஆலயத்திற்குச் சொந்தமான காணியில் கட்டடத்தை 50 வருட குததகையில் அமைப்பதற்கு முடிவெடுக்கப்படடது. பின குத்தகை முடிவடைந்த பிற்பாடு குததகையைப புதுபபிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் இவ் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் திருநெல்வேலி சந்தையை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. தற்போது திருநெல்வேலிச் சந்தை வளர்ச்சியடைந்து வருவதனால் அதை அபிவிருத்திசெய்ய வேண்டியதேவை உள்ளது.

ஆனால், அதை அபிவிருத்தி செய்வதற்கு தறபோது சந்தை இயங்கும் இடம் போதாமையாக இருபபதன்ால் வேறு காணி ஒன்றில் இதனை அமைப்பது தொடர்பாகவும் ஆராயபபட்டதோடு இதற்கான காணி ஒன்றை பெற்றுத்தரும்படி பிரதேச சபையினரிடம் கேட்கப்பட்டுள்ளது.

மேலும், நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெறுகின்ற குற்றச்செயல்களை தடுப்பது தொடர்பாகவும் இதில் ஆராயப்பட்டது.

நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகள் கோப்பாய் பொலிஸ நிலையத்திற்கும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கும உட்படடு காணபடுகின்றது. ஆனால் கோபபாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் இடம்பெறும் குற்றச் செயல்களை தடுப்பதோடு கோப்பாய பொலிஸார் துரிதமாக செயற்படுவதைப் போன்று யாழ. பொலிஸார் துரிதமாக ஈடுபடுவதில்லை எனவும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. (ற-19)

## விண்ணப்பதாரியின் வயதெல்லை 32ஆக அதிகரிக்கப்படவேண்டும்

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் வயதெல்லையை கடந்த காலங்களைப்போல 32ஆக அதிகரிக்க வேண்டும் என வன்னிப் பட்டதாரிகள் ஒன்றியம் அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து ஒன்றியத்தின் தலைவர் எம்.ரீ.எம்.மனாஸ் விடுத்துள்ள அறிக்கையில், தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்போது விண்ணப்பம் கோரப்பட்டுளள இலங்கை நிர்வாக சேவை பரீட்சைக்கு விண்ணப்பிகதும் விண்ணப்பதாரியின வயதெல்லை 30எனக் கூறப்பட்டுள்ளது.

இதுவரை பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறிய பட்டதாரிகள் க.பொ.த.உயர்தரப்பரீட்சை எழுதி 2 அல்லது 3வருடங்களின் பின்பே பல்கலைக்கழகங்களுக்கு சென்றிருந்தனர்.

அத்துடன் இலங்கை நிர்வாக சேவைக்கான பரீட்சையும் குறைந்தது 2 அல்லது 3வருட இடவெளியிலேயே நடாத்தப்படுகின்றது. இதனால இச்சேவைக்கு ஆட்சோக்கும் போட்டிப் பரீட்சையின் வயது எல்லை 30ஆக இருப்பதால் பல ஆயிரக் கணக்கான பட்டதாரிகள் ஒருமுறையேனும் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியாமற் போகின்றது என்றுள்ளது. (க)

## அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து போராளிகள் உள்வாங்கப்படுவர்

### -திருமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன்

(திருகோணமலை)

தற்போது அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் போராளிகள் தொடர்ந்தும் தமது அரசியல் பணிகளை மேற்கொள்ள முடியாத துர்ப்பாக்கியநிலை தோன்றியுளளது. எனவே ,அவர்கள் தொடர்ந்தும் அப்பகுதியில் இல்லாது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டப் பிரதேசத்துக்குள் உள்வாங்கப்படவுளளதாக திருமலை மாவட்ட அரசியலதுறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார்.

லெப்டினனட் கேணல் டிக்கானின் இறுதி வணக்க நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசாங்கப் பகுதிகளில் அரசியல் பணிகளில் ஈடுபட்டுள்ள எமது போராளிகள் ஆயுதங்களின்றி நடமாட முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

அமைதிச் சூழலில் எமது போராளிகள் கொலைசெய்யப்பட்டமைக்கு இராணுவமே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-4)

## நாளாந்தம் அமுல்படுத்தப்பட்டுவரும் மின்வெட்டினால் பாவனையாளர்கள் சிரமம்

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் இலங்கை மின்சாரசபை உத்தியோகப் பற்றற்ற முறையில் நாளாந்தம் மின்வெட்டினை பகல் இரவு எனப்பாராது அமுல்படுத்தி வருகின்றது.

இதனால் நாவற்குழியில் இருந்து கொடிகாமம் வரையிலான பகுதிகளில் இருக்கின்ற மின் பாவனையாளர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகிவருகின்றனர்.

இதற்கிடையில் இத்தகைய உத்தியோகப் பற்றற்ற மின்வெட்டு முறைபற்றி மின்சாரசபையினரிடம் கேட்ட சமயம், வெளிப்பிரதேசங்களில் சிறுவர்கள் பட்டம் ஏற்றி வருவதால்தான் மின் தடைப்பட்டு வருகின்றது எனத் தெரிவித்தனர்.

ஆயினும் இவ்விதமான நியாயப்படுத்தலில் எத்தகைய உண்மையும் இல்லையெனவும், யாழ்ப்பாண நகரப்பகுதியில் மின் பாவனை வலுகூடுதலாகக் காணப்படும் வேளைகளில் இலங்கை மின்சார சபையினர் நாவற்குழிப் பகுதிக்கு வரும் மின் தொடர்புகளை வெட்டி விடுவதாலேயே தென்மராட்சிப் பகுதிக்கான மின்விநியோகம் தடைப்படுகின்றது என்றும் அங்குள்ள மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய நிலை இப்பகுதிகளில் கடந்த ஒருமாத காலத்துக்கு மேலாக இடம்பெற்று வருவதால் மாணவர்கள் வீடுகளில் கல்விகற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேசமயம், தென்மராட்சிப் பிரதேசத்தில மின் இணைப்புகள் வழங்கப்படாத பகுதிகளுககு மின் இணைபபுக்களை வழங்கும்படியும் கோரிக்கைகள் விடப்பட்டு வருகின்றன.(க-16)

## பாதிப்புற்ற பிரதேசங்களில் 42000 வீடுகள் அமைப்பு

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் 42 ஆயிரம் குடியிருப்புக்க்ள் அமைக்கப்பட்டிருப்பதாக இடைக்கால வீடமைப்பு நிர்மாணத் திட்டத்தின் பணிப்பாளர் கூறுகின்றார்.

இந்தத் திட்டததின் கீழ் 47ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருந்தது. இந்தத்திட்டம் அடுத்தமாதம் முற்பகுதியில் பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றும், தனியொரு வீட்டைக் கட்டுவதறகு அரசாங்கம் ரூபா 40ஆயிரத்தை வழங்கியதெனவும் அவர் தெரிவித்துளளார். அதேசமயம் சுனாமியால் நிர்க்கதியானவர்களுக்கு நலன்புரி முகாம்களில் போதியளவிலான உணவுப்பொருட்கள் பகிர்ந்தளிக்கப்படவிலலை என்ற குற்றச்சாட்டைத தான் நிராகரிப்பதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திலக் ரணவிராஜா தெரிவித்துள்ளார். (க-2)

## நாகர் கோயில் மக்களுக்கு அரச காணிகள் வழங்கப்படும்

(மருதங்கேணி)

உயர் பாதுகாப்பு வலயத்தினால் இடம்பெயர்ந்துவாழும் நாகர்கோயில் மக்களை அரச காணிகளில் குடியேற்றுவதற்கான நடவடிக்கையில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் ஈடுபட்டுள்ளார்.

நாகா கோயில் உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து இடம்பெயர்ந்து நலனபுரிநிலையங்களிலும் சொந்தக்காரர் வீடுகளிலும் தங்கியிருக்கும் மக்களை வல்லிபுரம் வலிகண்டி பகுதியிலும் மற்றும் குடத்தனை பகுதியிலும் குடியேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான வரைபடம் கிராம அலுவலரால் மருதங்கேணி உதவி அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (க-35)

## இனவாதத்திற்கு எதிராக 17இல் மலையகத்தில் மாபெரும் பேரணி

(கொழும்பு)


ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பினை விரைவில் நடைமுறைபபடுத்தக கோரியும், இனவாத செயற்பாடுகளுக்கு எதிாப்புத் தெரிவித்தும் மலையக இளைஞர் முன்னணி எதிாவரும் 17ஆம் திகதி மாபெரும் பேரணியொன்றினை நடாத்தவுள்ளது.

இந்தப் பேரணி ஹட்டன் நகரில் நடைபெறவுள்ளது. இது தொடர்பில் மலையக நகரங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருக்கின்றன. துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதேவேளை, மலையக இளைஞர் முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த ஆர்ப்பாட்டப் பேரணியினை மலையகத்தைச் சேர்ந்த அமைப்புக்கள் தமது நலன்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ள முயல்வதாக அம் முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது. (ற-4)

# மரணத்தின் நிழலில்

## மீள் பார்வை சதாம் கதை 2

## அழிய மறுத்த ஆண் குழந்தை!



அந்தக் குக்கிராமத்தின் பெயர் அல் அவ்ஜா. தமிழில் வளைவு. டைக்ரீஸ நதி இக்கிராமம் இருக்கும் மேட்டு நிலத்தையொட்டி மிகவும் வளைந்து செல்வதால் அந்த ஊருக்கு இந்தப் பெயர். ஊரின் கடைக்கோடியில் ஒரு மண்குடிசை. வறுமையின் அத்தனை அங்கலட்சணங்களையும் மொத்தமாய் பெற்றிருக்கும் அதன் வாசலில் வெறித்த பார்வையுடன் தனிமரமாய் அமர்ந்திருந்தாள் ஜோசியக்காரி சுபா தல்ஃபா. உரமேறி தடித்த நல்ல உடல்வாகு கொண்டவள். அரேபிய பழங்குடி வழக்கப்படி நெற்றி, நாடி, கன்னங்கள் என முகம் முழுக்க பச்சை குத்தியிருந்தாள். தலையில் முக்காடாய் தொடங்கி பாதம் வரை போர்த்தின மாதிரி மேலங்கி அணிந்திருந்தாள். திருமணம் ஆகாதவள். ஆனால் நிறைமாத கர்ப்பிணி. எதிர்காலத்தை கணித்துச் சொல்வதில் கெட்டிக்காரி எனப் பெயர் பெற்றிருக்கும் அவளால் தனது எதிர்காலத்தைத் தான் சரியாகக் கணித்துக் கொள்ளமுடியவில்லை.

திடீரென முள்ளால் கீறின மாதிரி வயிற்றுக்குள் வலி. வேதனையுடன் முன்பக்கம் சரிந்தாள். கோபத்தில் நரம்புகள் புடைத்தன. கர்ப்பப் பைக்குள் குழந்தை புரள மீண்டும் வலி. ஆத்திரம் தலைக்கு ஏறியது. ஆவேசத்துடன் ஒரு கையால் தன் தலை முடியை கொத்தாய் பிடித்து இழுத்துக்கொண்டு இன்னொரு கையால் பருத்த வயிற்றில ஓங்கி ஓங்கிக் குத்தினாள். உள்ளிருக்கும் குழந்தை மீது அவளுக்கு அத்தனை வெறுப்பு.

கருவுற்றிருப்பதை முதன் முதலில் அறிந்தபோது சுபா அதிர்ந்து போனாள். ஊருக்குத் தெரிந்தால் கேவலம் என்று பதறினாள். கமுக்கமாக கருவை அழித்துவிட நினைத்தாள். பலனில்லை.

கரு கலையாமல் வளர்ந்தது. வயிறு பெரிதாய் தெரிந்தது. மறைக்க முடியாது என்கிற சங்கடத்தில் அவமானத்துக்கு அஞ்சி தூக்குப்போட்டு தொங்கி தற்கொலை செய்துகொள்ள முயனறாள். அக்கம் பக்க வீட்டுக்காரர்கள் கடைசி நேரத்தில் பார்த்து தடுத்துக் காப்பாற்றினார்கள்.

சுபாவின் காதலன் உசேன் அல்-மஜீத். அதே ஊரைச் சேர்ந்தவன் தான். நிலமற்ற விவசாயக கூலித்தொழிலாளி. கடந்த சில தினங்களாய் அவனை ஊருக்குள் காணோம். மாயமாய் மறைந்திருந்தான். கொள்ளைக்காரர்களின் விரோதத்தை சம்பாதித்திருந்த உசேன் அல்-மஜீத் அவர்களுக்குப் பயந்து சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப்போய்விட்டதாய் சிலர் நம்பினார்கள். கொள்ளைக்காரர்கள் பிடித்துச் சென்று அவனைக் கொலை செய்திருக்கலாம் என்பது வேறு சிலரின் யூகம். உண்மை எதுவாக இருந்தாலும் சுபாவின் கரம்பிடிக்க அவன் வரப்போவதில்லை.

கவலையில் கலங்கினாள் சுபா. தனது இயலாமை முழுவதையும் வயிற்றில் இருக்கும் குழந்தை மீது காட்டினாள். வயிற்றிலிருந்த வேதனை பிரசவ வலியாய் இடுப்புக்கு பரவியது. செத்துப்பிறக்கும் என சுபா எதிர்பார்த்த குழந்தை கைகால்களை உதறியபடி அழுதுகொண்டே பிறந்தது. தனது அத்தனை எதிர்ப்பையும் மீறி உயிருடன் பிறந்த அந்த ஆண் குழந்தைக்கு "எதிர்த்து நிற்பவன்" எனப் பெயரிட்டாள் சுபா. எதிர்த்து நிற்பவன் என்ற வார்த்தைக்கு இணையான அரேபியச் சொல் சதாம்.

குழந்தை சதாம் மூக்கும் முழியுமாய் அழகாய் இருந்தான். அவன் அழகை சுபாவின் முகத்துக்கு நேராய் மெச்சிய அண்டை வீட்டுக்காரர்கள் அவளது முதுகுக்குப் பின்னால் "முறைகேடாக பிறந்த குழந்தை" என்று எள்ளி நகையாடினார்கள். இந்த அவமானம் ச்தாமின் ஆயுள முழுக்க நிழல்போல் தொடர்ந்தது. பிற்காலத்தில் சதாமின் அரசியல் எதிரிகளும் அமெரிக்கா -ஐரோப்பிய கட்டுரையாளர்களும் இதை அளவுக்கு அதிகமாகவே பயன்படுத்தி சதாமையும் சுபாவையும் சிறுமைப்படுத்தினார்கள்.

சதாம மீது கொண்டிருந்த வெறுப்பு அவன் பிறந்த பிறகும் குறையவில்லை சுபாவுக்கு. குழந்தையை தொட்டுத் தூக்குவதைத் தவிர்த்தாள். பாலூட்ட மறுத்தாள். பட்டினி போட்டாள்.

"கைக்குழந்தைக்கு தாயின் மடிதான் உலகம். அவளின் அன்பிலும் அரவணைப்பிலும் அது பாதுகாப்பை உணர்கிறது. தாயின் அரவணைப்பு கிடைக்காத பாவப்பட்ட குழந்தை பாதுகாப்பற்ற உணர்வைப் பெறுகிறது. பயம் கொள்கிறது. சுற்றுச்சூழலை சந்தேகத்துடன் பார்க்கிறது. பிற்காலத்தில் சதாம் தன்னை சுற்றியிருக்கும் எவரையும் நம்பாமல் எல்லோரையும் சந்தேகக் கண்கொண்டு பார்த்ததற்குக் காரணம் குழந்தைப் பருவத்தில் தாயின் அன்பும் அரவணைப்பும் கிடைக்காமல் போனதுதான்" என்கிறார்கள் உளவியல் நிபுணர்கள்.

சுபாவின் அண்ணன்-சதாமின் தாய்மாமன் -கைருல்லா தல்ஃபா பாக்தாத்தில் மன்னன் இராணுவத்தில் அதிகாரியாகப் பணிபுரிபவர். லீவில் அல்-அவ்ஜாவுக்கு வந்தார். சதாமுக்கு சுபா இழைக்கும் கொடுமைகளைக் கண்டார். துணுக்குற்றார். சதாமை இரக்கதுடன் பார்த்தார்.

குழந்தை சதாமோ தாயின் குணம் தெரியாமல் மாமாவைப் பார்த்து பொக்கைவாய் திறந்து வெகுளியாய் சிரித்தான். கைருல்லா மனம் நெகிழ்ந்தார்.

"சரி...இவன் நான் தூக்கிட்டுப் போய் வளர்த்துக்கிறேன்". பாக்தாத் வந்து சேர்ந்தான் சதாம். அன்பான மாமா- அத்தை அடித்து திட்ட அம்மா இல்லை.


நேரத்துக்கு உணவு. நிம்மதியான உறக்கம். எஞ்சிய நேரத்தில் தன் வயதையொத்த மாமா மகன் அட்னனுடன் விளையாட்டு... என அமைதியாக போய்க் கொண்டிருந்தது சதாமின் வாழ்கை. அவனுக்கு நான்கு வயதானபோது மீண்டும் சோதனை. சக இராணுவ அதிகாரிகளோடு சேர்ந்து மன்னராட்சியை கவிழ்க்க முயன்றதாக கைருல்லா கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

வருமானம் இல்லாமல் குடும்பம் தத்தளித்தது. பாக்தாத்தில் தாக்குப்பிடிக்க முடியாது என்றுணர்ந்த அவரது மனைவி சிறிது காலம் தன் சொந்த ஊரில் போயிருக்க முடிவு செய்தாள். "சதாமை என்ன செய்வது"-யோசித்தாள். அவனை அழைத்துக்கொண்டு அல-அவ்ஜாவுக்கு வந்தாள். சுபாவிடம் ஒப்படைத்து விட்டுப் போய்விட்டாள். வீட்டில் சுபாவுடன் புதிதாய் ஒரு ஆண் இருந்தான். அவன் சுபாவின் கணவன ஹாசன் அல்-இப்ராகிம். சமீபதத்தில் தான் அவர்களுக்கு திருமணம் நடந்திருந்தது. அம்மாவின் கணவனை சதாம் ஏறெடுத்துப் பார்த்தான். திடுக்கிட்டான். தன் மனைவிக்கு மாற்றான் மூலம் பிறநத குழந்தையான சதாமை இப்ராகிம் வெறுப்பில் விளைந்த குரோதத்துடன் உக்கிரமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்தப் பார்வையில் பச்சிளம் பாலகன் சதாமின் ஈரக்குலை கருகியது.

(தொடரும்)

நன்றி :-நக்கீரன்



கிழக்கு வன்முறைச் சம்பவங்களைக் கண்டித்து நேற்று முன்தினம் கிழக்குப் பல்கலைச் சமூகம் நடத்திய ஆர்ப்பாட்டத்திலிருந்து...



ஐக்கிய தேசியக்கட்சி தென்பகுதியில் தொடர்ச்சியாக நடத்திய 'மக்கள் சக்தி' நடவடிக்கையின் இறுதி நிகழ்வில் கலந்து கொண் டோரில் ஒரு பகுதி...

## தகவல் திரட்டும் பணி

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் செயற்படுகின்ற அரச நிறுவனங்கள் உளநூா அரச சார்பற்ற நிறுவனங்கள் சர்வதேச நிறுவனங்கள் மற்றும் தொண்டா நிறுவனங்களுக்கிடையில் வலைப் பின்னலை ஏற்படுத்தும் நோக்குடன் யாழ்ப்பாணத்தில் இயங்கும் ரீ.ஆர்.ஆர். ஓ.நிறுவனம் யு.என். எச்.சீ.ஆர் நிறுவனத்துடன் இணைந்து தகவல் திரட்டும் பணியை ஆரம்பித்துள்ளது.

இத்தகைய நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் திட்டங்களை பொது மக்கள் மத்தியில் தெரியப்படுத்தி மக்களின் நலனை மேம்படுத்தவும், திட்டங்களைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்தச் செயயவுமே இத்தகவல் திரட்டும்பணி மேற்கொள்ளப்படுவதாக ரீ.ஆர்.ஆர் ஓ. நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தகவல்கள் திரட்டும் பணிகள் பூர்த்தியடைந்ததும் இத் தகவல்கள் நூல வடிவில் வெளியிடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-16)

## திருமுறை இசைமாமணி சான்றிதழ்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் யாழ்.குடாநாட்டில் நடாத்தி வரும் இலவசத் தேவாரப்பண்ணிசைப் பயிற்சி வகுப்பில் பங்குபற்றி திருமுறை இசைமாமணி புகுமுகத் தேர்வில் சித்தியெய்தியோருக்கான சான்றிதழ, பரிசுகள் வழங்கல் நிகழ்ச்சி எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை யாழ். வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகா வித்தியாலயத்தில நடைபெறவுள்ளது.

அகில இலங்கைத் திருமுறை மன்றம் யாழ்.குடாநாட்டில் பல ஆலயங்களிலும் இலவசமாக தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்புகளை தேவார இசை விற்பன்னர்களை ஒழுங்குசெய்து நடாத்தி வருகின்றது.

இப்பயிறசி வகுப்பில் ஆண், பெண் இருபாலாரும் வயதெல்லையின்றி பங்குபற்றலாம. வகுப்புகளில் பங்குபற்றி பயிற்சிபெற விரும்புகின்றவர்கள் அகில இலங்கைத் திருமுறை மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தியிடம் மன்ற அலுவலகத்தில் அல்லது வகுப்புகள் நடைபெறும் இடங்களில் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தேவாரப் பண்ணிசைப் பயிற்சி புகுமுகநிலை, இடநிலை, முதுநிலை என்ற ஒழுங்கில் வகுப்புகள் நடைபெற்று வருகின்றது.

முறையான பயிற்சி பெற்றவுடன் அதற்கான தேர்வை நடாத்த சாதாரண, விசேட, அதிவசேட தகைமைகளுக்கமைய சான்றிதழ்,பரிசுகள் வருடந்தோறும் வைகாசிமாதம், ஆடிமாதங்களில் வரும் பௌர்ணமிதின திருமுறைப் பெருவிழா வைபவத்தில் கௌரவித்து வழங்கப்படும். (க)

## அறநெறிப் பாடசாலை ஆரம்ப விழா

(யாழ்ப்பாணம்)

சிவ அறநெறிப் பாடசாலை ஆரம்பவிழா நாளை வெள்ளிக்கழமை பி.ப 4.30 மணிக்கு ஸ்ரீ மனோன்மணி சமேத அண்ணமகேஸ்வரர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினராக யாழ். இந்து கலாசார திணைக்கள உதவிப் பணிபபாளர் சிவ.மகாலிங்கம், உடுவில் பிரதேச செயலர் சி.திருவாகரன், சி.சண்முகவடிவேல், சுன்னாகம் கிராமசேவையாளர் பாலபத்மன், கோட்டைக் காடு அ.த.க. பாடசாலை அதிபர் திருச்சி நவரட்ணம் மற்றும் ஏழாலை சைவ சன்மார்கக வித்தியாசாலை அதிபர் சிவநடராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதில் ஆலய பரிபாலனசபைச் செயலாளர் வே.தம்பிரத்தினம் வரவேறபுரையையும், ஆலய பரிபாலனசபை உபதலைவர் சி.சிவஞானம் தலைமையுரையையும்,ஆலய பரிபாலனசபைப் பொறுப்பாளர் சி.மகேந்திரன் கருத்துரையையும் வழங்கவுள்ளனர். (ற)

## வெளிச்சம்வெளி வந்துள்ளது

தமிழீழ விடுதலைப்புலிகளின் கலை,பண்பாட்டுக்கழகத்தினால் வெளியிடப்படும்-'வெளிச்சம்' சித்திரை- ஆனிமாத இதழ் அண்மையில் வெளிவந்துள்ளது. (க-2)

பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்குங் கயிறு - குறள்

வலம்புரி

## மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்க இராணுவ வழியில் ஜே.வி.பி. முயற்சியா?

திருகோணமலையில் விடுதலைப்புலிகள் மீது இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலை ஓர் சாதாரணமான நிகழ்வாக கருதிவிட முடியாது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலில் இருக்கும்போது அரசகட்டுப்பாட்டுக்குள் இருந்த விடுதலைப்புலிகளின் பண்ணை மீது தாக்குதல் நடத்தப்பட்டது எனில் அதிலிருந்து இராணுவத்தரப்பு விலகிக்கொள்ளவும் முடியாது என்பதை அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப்பணியை மேற்கொள்ளுவதற்கான உடன்படிக்கை கைச்சாத்திட்ட ஒருசில தினங்களுக்குள், புலிகள் மீதான தாக்குதல் இடம்பெற்றிருப்பது இங்கு நோக்குதற்குரியது.

பொதுக்கட்டமைப்பை குழப்பும்நோக்கில் அரசுக்கான ஆதரவை விலக்கிக்கொண்ட ஜே.வி.பி. பொதுக்கட்டமைப்பை தடைசெய்யுமாறு கோரி உயர்நீதிமன்றத்திலும் வழக்குத்தாக்கல் செய்திருந்தது. எனினும் ஜே.வி.பியின் பருப்பு உயர்நீதிமன்றத்திலும் அவியவில்லை.

எப்பாடு பட்டும் பொதுக்கட்டமைப்பை சீர்குலைக்கவேண்டும் என்ற நினைப்போடு செயற்பட்டுவரும் ஜே.வி.பி நாட்டில் மீண்டும் ஓர் யுத்தத்தை தூண்டிவிடுவதற்கு கடும் பிரயத்தனம் செய்துவருகிறது.

இதன் பின்னணியில் இராணுவத்தில் உள்ள ஜே.வி.பி விசுவாசிகள் யுத்தத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுவருகிறார்களோ என்ற சந்தேகம் திருமலை சம்பவத்தை அடுத்து ஏற்பட்டுள்ளது.

பொதுக்கட்டமைப்பை அமுல்படுத்தலாகாது என கோஷம் எழும்பும் தென்னிலங்கை பல்கலைக்கழக மாணவர்களின் பின்னணி, ஜே.வி.பியின் ஆதரவாக இருப்பது கண்டறியப்பட்ட உண்மை. அவ்வகையில் திருகோணமலையில் விடுதலைப் புலிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னணியில், ஜே.வி.பி சார்புடைய இராணுவம் செயற்பட்டிருக்கலாம் என்ற ஊகம் நியாயமானதே.

இது பற்றி உரிய புலன்விசாரணைகளை ஜனாதிபதி எடுக்கத்தவறினால் பேரினவாத சக்திகள் வெற்றியடைவது தவிர்க்கமுடியாது ஆகிவிடும். பொதுக்கட்டமைப்பை எதிர்த்த ஜே.வி.பி பாராளுமன்றத்திலும், நீதிமன்றத்திலும் தோல்விகண்டு விட்டது.

இத்தோல்வி சிங்கள மக்கள் மத்தியில் தமக்கு இருக்கக்கூடிய செல்வாக்கை சரித்துவிடும் என்ற பயம் காரணமாக தனது அரசியல் செல்வாக்கை தக்கவைப்பதற்கு நாட்டில் யுத்தத்தை ஆரம்பிப்பதே ஒரேவழி என அவர்கள் கருதுகின்றனர்.

யுத்தத்தை ஏற்படுத்தி நாட்டைக்குழப்புவதன் மூலம் பொதுக்கட்டமைப்பை சீர்குலைத்தல் யுத்தநிறுத்த உடன்படிக்கையை செயல் இழக்கவைத்தல் அதன்ஊடாக, சமாதான அனுசரணையாளர் ஊடாக செயற்பட்டுவரும் நோர்வேயை வெளியேற்றுதல் என்ற வகையில் ஜே.வி.யின் திட்டம் தயாராகி உள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க துணிவோடும் பொதுக்கட்டமைப்பை அமுல்படுத்த முன்வருவதோடு ஜே.வி.பி விரும்பும் யுத்தத்தை தடுக்க-விடுதலைப்புலிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக பக்கசார்பற்ற விசாரணையை நடத்தவேண்டும் அப்போது தான் பேரினவாத சக்திகளின் பலத்தை அடக்க முடியும்.

## கடற்கரையில் 100 மீற்றர் எல்லையில் கட்டடங்களை நிர்மாணிக்க அரசு அனுமதி

ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் 100மீற்றர் தூரத்திற்கும் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு அரசாங்கம் விரைவில் அனுமதியளிக்கும் என கரையோரப் பாதுகாப்புத் திணைக்களப் பணிப்பாளர் ஆர்.ஏ.வி.பி.சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆழிப் பேரலை நிகழ்ந்தபின்னர் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் 100மீற்றர் தூரத்திற்கும் எவ்வித கட்டடங்களையும் நிர்மாணிப்பதற்கு அனுமதியளிக்கப்போவதில்லை என அரசாங்கம் முன்னர் அறிவித்திருந்தது. எனினும் அந்த 100மீற்றர் தூரத்தினுள் இருக்கும் 3மீற்றர் வரை உயரமான மேட்டுப் பிரதேசங்களில் வசித்தவர்களுக்கு அந்த இடங்களில் தமது வீடுகளை அமைத்துக்கொள்ள அரசாங்கம் அனுமதியளிக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

அதற்கமைய 100மீற்றர் தடையை முற்றிலுமாக நீக்காமல் அதில் சிறு சிறு திருத்தங்களை மேற்கொண்டு சில கட்டட நிர்மானங்களை மேற்கொள்வதற்கு அனுமதியளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

3 மீற்றரை விட உயரமான பிரதேசங்களில் வீடுகள் மற்றும் கட்டடங்களை அமைப்பதற்குத் தேவையான உதவிகளை வழங்குவது குறித்து நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடற்கரையில் இருந்து 100மீற்றர் முதல் 200மீற்றர் வரையிலான பிரதேசங்களில் வசித்துவந்த மீனவ மக்களின் வாழ்க்கைமுறை வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்டே அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

100மீற்றர் தூரத்தினுள் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமா என்பது குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதியினால் ஜனாதிபதி செயலாளரின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. இதில் நகர அபிவிருத்தி அதிகாரசபை அத்தியட்சகர் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களப் பணிப்பாளர் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். அந்தக்குழுவில் மொத்தம் 10பேர் உறுப்பினர்களாகவுள்ளனர்.

காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை,அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் 100மீற்றர் தூரத்தில் இருந்து மக்களை அப்புறப்படுத்திவிட்டு அங்கு நிமாண வேலைகளை மேற்கொண்டாலும் அவர்கள் தங்களின் ஜீவனோபாயத்தை தேடுவதற்காக அப்பிரதேசங்களில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டி ஏற்படும் எனவும் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ற-4)

## புதிய இராஜதந்திர அரசாங்கத்தையே நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றனர்

### ஐ.தே.க.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இந்த நாட்டு மக்கள் புதிய இராஜதந்திர முறையொன்றினையே எதிர்பார்ப்பதாக ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

வாழ்க்கைச் செலவுக்கான தீர்வொன்றைக் காண்பது மிகவும் அத்தியாவசியமானதாகும் எனவும் அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் "மக்கள் சக்தி" பேரணியின் இறுதி நிகழ்விலேயே இக்கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

**பாராளுமன்ற உறுப்பினர் கருஜெயசூரிய**

இந்த நாட்டு மக்கள் புதிய அரச இராஜதந்திரமொன்றினை எதிர்பார்க்கின்றனர். இதன் மூலம் நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்கும் அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவுக்கும் நாட்டில் சட்டம், ஒழுங்கு நடைமுறைப்படுத்தப்பட்டமைக்கும வறுமையினை ஒழிப்பதற்கும், இவற்றினை விட விசேடமாக சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பது போன்ற விடயங்கள் குறித்தும் மக்கள் மிகவும் எதிர்பார்ப்புடன் உள்ளனர்.

இதனை எதிர்பார்த்து மக்கள் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினை சூழ்ந்துகொண்டுள்ளனர்.

**பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க**

இன்று வாழ்க்கையினைக் கொண்டு நடாத்த முடியாதளவிற்கு உயர்கின்ற வாழ்க்கைச்செலவுக்கு கட்டாயமாக தீர்வொன்று காணப்படவேண்டும்.வாய்த்தர்க்கங்கள் காரணமாக வாழ்க்கைச்செலவு இன்று 50வீதத்தினால் உயர்ந்துள்ளது. இனறு நாட்டின் சமாதானம் யுத்தத்தினை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

இவ் அனைத்து விடயங்களையும் ஒன்று சேர்த்து இந்த அரசாங்கம் 16 மாதகாலப்பகுதியில் வேலை எதனையும் செய்யவில்லை. என மக்கள் எடுத்துக்காட்டுகின்றனர் என கருத்துவெளியிட்டனர். (ற-4)

## சேது சமுத்திரத் திட்டத்திற்கான கடலை ஆழப்படுத்தும் பணி தீவிரம்

(தூத்துக்குடி)

சேதுக்கால்வாய் அமைப்பதற்காக பாக், ஜலசந்திப் பகுதியில் கடலை ஆழப்படுத்தும் பணி மிக வேகமாக நடந்து வருகிறது.

மன்னார் வளைகுடாவையும் பாக் ஜலசந்தியையும் இணைப்பதற்காக ரூபா 2,427,40கோடி கடலுக்குள் கால்வாய் அமைப்பதே சேது சமுத்திரத்திட்டம் தூத்துக்குடி துறைமுகச் சபைத் தலைவர் ரகுபதி சேதுக்கால்வாய் காப்பிரசேன் லீமிட்டெட் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைவராகவுள்ளார். இத்திட்டத்திற்கு யூலை 2ஆம் திகதி மதுரையில் பிரதமர் மன்மோகன்சிங் அடிக்கல் நாட்டினார். அடிக்கல் நாட்டப்பட்ட அன்றே கடலை ஆழப்படுத்தும் பணியும் தொடங்கியது.

சேதுக்கால்வாய்க்காக இந்தியத் தூர்வாரும் கழகத்தின் கப்பல் ஒன்று இப்போது ஆதாம் பாலத்தில் இருந்து 150கி.மீ தூரத்தில் உள்ள பாக்ஜலசந்திப் பகுதியில் 13.57கி.மி. நீளத திற்கு கடலை ஆழப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது. திட்டம் தொடர்பான அனைத்துப் பணிகளும் விரைவாக நடந்து வருகின்றன. மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாகவே கால்வாய்ப் பணிகள் முடிய வாய்ப்புள்ளது என திட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ற)

## கசிப்பு வழக்கில் பெண்ணுக்கு ரூ.80,000 அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

கசிப்பு வழக்கில் பெண் ஒருவருக்கு யாழ்.மாவட்ட நீதிமன்றத்தால் 80.000ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. கசிப்புக் காச்சியமை, கசிப்புக்காய்ச்சும் உபகரணங்கள் வைத்திருந்தமை, கோடா வைத்திருந்தமை உள்ளிட்ட 4 குற்றங்களுக்காக கொக்குவில் மேற்கைச்சேர்ந்த பெண் ஒருவர் யாழ்ப்பாணம் மதுவரித் திணைக்களத்தினால் கடநத மாதம் 21ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போது பிரஸ்தாபப் பெண்ணுக்கு 60ஆயிரம் ரூபாவை தண்டப்பணமாகவும், 20ஆயிரம்ரூபாவை தர்மப் பணமாகவும் செலுத்துமாறு நீதிபதியால் உத்தரவிடப்பட்டது. (ற-19)

## கூட்டமைப்பிலிருந்து விலகினாலும் உட்பூசல் தொடர்ந்தும் வலுக்கிறது

(கொழும்பு)

தெற்கின் சிரேஷ்ட தலைவர் ஒருவரை பிரதமர் பதவிக்கு நியமிப்பதன் மூலம் நாடு பற்றியும் கட்சி பற்றியும் ஜனாதிபதியிடம் உள்ள உணர்வு உறுதிசெய்யப்படுகிறது என ஜே.வி.பி.உறுப்பினர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகமொனறுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

17 தடவைகள் தோல்வியடைந்த கட்சியொன்று பல துண்டுகளாகச் சிதறிய சக்திகளை ஒன்றிணைத்து அனைவரையும் ஒன்றிணைத்து தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றோம்.

மாகாணசபைத் தேர்தல்களிலும் வெற்றிபெற்றோம். ஜனாதிபதியினையும் வெற்றிபெறச்செய்தோம். இருப்பினும் ஜனாதிபதி எங்களை ஒரு பொருட்டாகவே பார்க்கவில்லை அவர் தனக்கு சார்பானவர்களையே முககிய பதவிகளுக்கு நியமித்தார்.

குறிப்பாக பிரதமராக மஹிந்த ராஜபகஷவை நியமித்தார். ஆனால் சிரேஷ்ட அரசியல்வாதியாக அனுர பண்டாரநாயக்க இருந்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்ததன் மூலம் ஜனாதிபதிக்கு கட்சியில் உள்ள உணர்வும் பற்றும் நாட்டின் மீதுள்ள பற்றும் தென்படுகின்றது. இவை இறுமாப்போடு கூறும் கருத்துக்களாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

## சாயி அருளமுதம்

அடிபபடையிலும், மூலாதாரத்திலும் பூரணமாகவும் மனிதன் 'நிததியத்துவம' உடையவன. அவன 'அமிர்தஸ்வரூபம்';ஆனால மரணித்து விடுவேனென அஞ்சுகின்றான். அவன் ஆனநதஸ்வரூபம; என'னும் தான் துன்பத்திலமிழ்ந்திருப்பதாக எண்ணிக் கண்ணீர் உகுக்கிறான். அவன் 'சாந்தஸ்வரூபம்'; ஆயினும் எவவிடத்திலும் மிகுந்த விசாரததில் அழுந்திக் கிடக்கிறான். முட்டாள்தனமான இந்த சுய ஏமாற்றுதலே இன்று உலகம் அனுபவித்துக் கொண்டிருக்கும் துயரத்துக்கு மூல காரணியாகும்.

நாளாந்த நற்சித்தனை

# ஓமந்தை புத்தர்சிலை அகற்றப்பட்டது

(வவுனியா)

வவுனியா ஓமந்தை பிள்ளையார் ஆலய வளவினுள் அமைக்கப்பட்டிருந்த புத்தர்சிலை கடந்த திங்கட்கிழமை இரவோடு இரவாக அகற்றப்பட்டிருப்பதாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தமக்கு அறவித்திருப்பதாக தமிழீழ விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறையினர் தெரிவித்தனர்.

இதனை வவுனியாப்பொலிஸார் நேற்று உறுதிப்படுத்தினர்.

தனியாரான பூசகர் ஒருவருக்கு சொந்தமான காணியில் பலவருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்டிருந்த பிள்ளையார் கோவில் வளவிலேயே இந்தப் புத்தர் சிலை வைக்கப்பட்டிருந்தது.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டமையை தொடர்ந்து ஓமந்தை பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்த்தப் பட்டார்கள்.

அப்போது இந்தபிள்ளையார் கோவில் வளவில் இந்த புத்தர் சிலை வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

இதனை அகற்ற வேண்டும் என்று அப்பகுதி மக்கள் பல முறைகோரிக்கை விடுத்திருந்தனர். இதன் தொடர்பாக காணி உரிமையாளர் ஆகிய பூசகரும், வவுனியாமாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்றினை தாக்கல் செய்திருந்தார்.கடந்த 11ம் திகதி வவுனியா மாவட்டநீதிபதி எம்.இளஞ்செழியன்முன்னிலையில் விசாரணை நடைபெற்றது.

இப்பிரதேசத்தின் இயல்பு நிலைக்கும் சமாதானநிலைக்கும் ஊறுஏற்படாத வகையில் இந்த விடயத்தினை கையாளுவது என விசாரணையின் போது இணக்கம் காணப்பட்டு,வரும் 20ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் புத்தர் சிலை அகற்றப்பட்ட தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது (ச-4)

# சுயநலத்திற்காக முஸ்லிம்களை பலிக்கடாவாக்குகிறார் ஹக்கீம்

## அமைச்சர் பௌசி குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம் மக்கள் பாரபட்சமாக நடத்தப்பட்டால் அதற்கு எதிராக தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்துள்ளார்.

பி.பி.சி.சந்தேசியவிற்கு நேற்று வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத்தெரிவித்தார்.

வடக்குகிழக்குப பகுதியில் முஸ்லிம்கள் ஓர் தனித்துவமான இனம் என்பதை விடுதலைப்புலிகள் தற்போது முதன்முறையாக ஏற்றுக்கொண்டுள்ளனர்.

நிவாரண சபையில் உள்ள அரசாங்கப்பிரதிநிதிகள் முஸ்லிம்களை பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

சிறிலங்கா முஸ்லிம்காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் இயலாத் தன்மையற்ற அரசியல் வாதியாவார். இவர் தனது சுயநலத்திற்காக முஸ்லிம்களை பலிக்கடாவாக்கின்றார் என்றார்.

அத்துடன் எதிர்கால சமாதான பேச்சுக்களில் முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு வழங்கப்படும் என்று நான் நம்புகின்றேன். நிவாரண சபையில் அரசியல் கட்சியைச் சாராத சுதந்திரமான முஸ்லிம் பிரதிநிதிகளை பிராந்திய மற்றும் மாவட்ட அளவில் நியமிக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.(ச-4)

# லெப்.சீலனின் 22ஆம் ஆண்டு நினைவு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் முதல் தாக்குதல் தளபதியான லெப்டினன்ட் சீலனின் 22ஆம் ஆண்டு நினைவுநாள் நாளை கிளிநொச்சி இயக்கச்சிப் பாடசாலையில் மாலை 5.45மணிக்கு நடைபெறவுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் சாள்ஸ்அன்ரனி சிறப்புப்படை அணியின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு பிரமாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச)



நேற்றைய தினம் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் இடம்பெற்ற முஸ்லிம் பிரதிநதிகள் உடனான சந்திப்பில், விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளந்திரயன், முஸ்லிம் பிரதிநிதி ஒருவரை கைலாகு கொடுத்துவரவேற்பதையும், சந்திப்பில் கலந்து கொண்டோரையும் படத்தில் காணலாம்.

# ஜனாதிபதி மாளிகை...

தொடர்புமையங்களைக் கொண்ட உலக வர்த்தகமையம், மத்திய வங்கி, இலங்கை வங்கித்தலைமை யகம், செலிங்கோ மற்றும் கலதாரி, ஹில்ட்டன், கொழும்பு இன்ற கொன்றனன்றல் சொகுசு விடுதிகளும் அடங்கும்.

எனவே இந்த இடங்களில் பணியாற்றும் பணியாட்கள், விருந்தினர்கள் உள்ளிட்ட அனைத்துத்தரப்பினரும் அதிஉயர் பாதுகாப்பு வலயத்தின் அடிப்படையில் நடத்தப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் உள்ள அரச் மற்றும் தனியார் நிறுவனங்களின் உரிமைமையாளர்கள் அல்லது தலைமையாளர்கள் தமது கட்டடங்களில் உள்ள தளபாடங்கள், பணியாட்கள் பற்றிய விபரங்கள் அறிவிக்கப்படவேண்டும்.

அத்துடன் மாற்றங்களும் 24 மணித்தியாலத்துள் அறிவிக்கப்படவேண்டுமெனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. அத்துடன் இந்தப் பகுதிக்குள் காவற்துறையினர் தேடுதல்களை நடத்தவோ சந்தேகத்துக்குரியவர்களை கைதுசெய்யவோ பொலிஸாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை முன்அனுமதி இன்றி இந்த உயர்பாதுகாப்பு வலயத்துள் கனரகவாகனங்கள் உள்நுழைவதும் தடுக்கப்பட்டுள்ளது. இநநிலையில் வாகனங்கள் நிறுத்தப்படுவதும் இந்த சட்டதிட்டங்களுக்கு உட்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-4)

# போராளிகளை உடன்...

ளிகள் மீது, இராணுவமும் அதனோடு இயங்கும் ஆயுதக்குழுக்களும் நிழல்யுத்தத்தை மேற்கொண்டு வருகின்றது.

இதுகுறித்து யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவிடம் பலமுறை புலிகள் தமது விசனத்தை வெளிப் படுத்தி வந்தனர். எனினும் கடந்த மாதம் வெலிகந்தையில் 40போராளிகளின் உயிருக்கு குறிவைத்து இராணுவமும் அதனுடன்சேர்ந்தியங்கும் குழுக்களும் பாரியதாக்குதலை நடத்தின. இதில் ஒரு போராளி படுகாயமடைந்தார்.

இதனால், இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் அரசியல் பணியில் ஈடுபட்டுள்ள போராளிகளின் உயிருக்கு உத்தரவாதம் அளிக்கக்கோரி அரசுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் 14நாள் கெடு விதித்தனர்.

ஆனால் அரசு இதற்கு உரிய பதிலை அளிக்காது நிலையில் மீண்டும் செல்வநாயகபுரத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் போராளிகள் மீதும் தாக்குதல் நடத்தி இருவரை படுகொலை செய்தது.

இந்நிலையில் தென்தமிழீழத்தின் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் அதிகம் உள்ளபகுதிகளில் இருந்து போராளிகளை வெளியேறி தமது நிர்வாகப்பகுதிகளுக்கு திரும்புமாறு தமிழீழவிடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் நேற்று உத்தர விட்டிருப்பதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை அரசுக்கு விடுதலைப்புலிகள் அறிவித்திருந்த 14நாள் காலக்கெடு இன்றுடன் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.(ச4)

# இராணுவ...

ரவை நீக்குவது குறித்து ஆராயப்படுமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

தனித்தனியாக ஒவ்வொரு ஆயுதப்படைகளினதும் அவசரதேவை இராணுவத்தளபாடங்களின் தராதரத்தன்மை போன்ற விடயங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ச)

# புத்தளத்தில்...

யாள அட்டை ஒன்றையும் சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

அடையாள அட்டையிலும் சாரதி அனுமதிப்பத்திரத்திலும் பெயர்கள் மாறுபட்டுக்காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.(ச-8)

# விடுதலைப்புலிகள்..

இதேவேளை பொதுக்கட்டமைப்பு நகல் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் முஸ்லிம்களுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற முதல்சந்திப்பு இதுவென்பது குறிப் பிடத்தக்கது. (ச-4)

# அரசிற்கு...

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் போராளிகளுக்கான பாதுகாப்பை வழங்காது என தமிழச்செல்வன் தெரிவித்துள்ளார்.

அதற்கான பதிலை விரைவில் அரசுக்கு அனுப்பவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ச-4,8)

# பொதுக்கட்ட...

மீளமைப்புப் பணிகளில் ஜப்பான் அரசு ஈடுபட்டுவருகின்றது.

பொதுக்கட்டமைப்பு என்பது அரசின் எண்ணப்பாடு அதில் முக்கிய பங்காற்றுமாறு அரசும் கேட்டுக்கொண்டதால்தான் நாம் எமது நிதி உதவிகளை அதனூடாக அளிக்க முடியும்.

ஆனால்,இதுவரை எமது அரசிடம் இதுகுறித்து எதுவும்பேசவில்லை. அதனால் பொதுக்கட்டமைப்பு ஊடாக ஜப்பானிய அரசு நிதிஅளிக்காது என்று அவர் கூறியுள்ளார்.

ஜப்பான் அரசு தொடர்ந்து அளித்துவரும் நிதியை பொதுக் கட்டமைப்பிற்கு அரசால் தன்னிச்சையாக திருப்பிவிடமுடியாது என்றும் ஜப்பானியத்தூதரகத்தின் அனுமதியுடன்தான் அதைச்செய்யவேண்டும் என்றும் கூறிய அவர் இருந்தபோதும், நாம் அனைத்துதரப்பு மக்களுக்கும் நிவாரண உதவி சென்றடையவேண்டும் என்றே விரும்புகிறோம் எனக் கூறினார்.

இருப்பினும் பொதுக்கட்டமைப்பை தமது ஜப்பானிய அரசு எதிர்க்கவில்லை என்றும் ஹிடேகி மட்சூவோ தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் அமெரிக்கா அரசும் இதேபோன்றதொரு நிலையை மேற்கொண்டது குறிப்பிடத் தக்கது. (ச-4)

# திருமலைச்...

களை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கடிதமொன்றினை அனுப்பிவைத்துள்ளார்.

அதன் அடிப்படையில் நாம் விசாரணைகளை மேற்கொண்டு உள்ளோம். இது தொடர்பாக மாவட்ட கண்காணிப்புக்குழுவினர் நேரடி விசாரணைகளை மேற்கொண்ள்ளனர்.

அதன் முடிவுகள் குறித்து விரைவில் அறிவிக்கப்படுமென கண்காணிப்புக்குழுத்தவைர் தெரிவித்தார். (ச)


நியூ சிற்றி ரேடேர்ஸ்

எம்மிடம் சகலவிதமான ரீவிக்களும், CD, VCD, DVD PLAYER களும், சகலவித மான ரேடியோக்களும் மற்றும் கிறைண்டர்கள், மணிக்கூடுகள், மின்சார உபகர ணங்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

மேல்மாடி இல. 135/1 கஸ்தூரியார் வீதி,
(குளத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம்
T.P: 021 222 3226

(C-அ-1348)

பதவி வெற்றிடம்

* கணணி பக்க அமைப்பாளர்கள்
(ஆண்கள் இரவுக்கடமை)
* பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
(பெண்கள் பகல் கடமை)

வலம்புரி நிறுவனத்திற்கு 6கிலோமீற்றர் தூரத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டும் இன்று பிற்பகல் 3.30மணிக்கு சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில்வரவும்.

ஆளணி முகாமையாளர்
வலம்புரி
இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.




நிறைஞ்சனாஸ் சினிமா
சங்கானை

அஜித், தேவயானி, நடித்த

காதல் கோட்டை

காட்சி நேரம்: 11.00, 2.45
06.00 (பு.நே)

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது | யாழ்.

சத்தியராஜ், சுனிதாவர்மா, வடிவேல் நடித்த
6'2"
காட்சி நேரம்: (பு.நே) 10.30,2.30,6.30,9.30

15.07.2005 முதல்

அர்ஜுன் சினேகா, கிரண், வடிவேலு
சேர்ந்து கலக்கும் அடிதடி காதல் நகைச்சுவையுடன்
சின்னா


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.